Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

சொலெக்ஸ்
மூக்குக் கண்ணாடியகம்
கண் பரிசோதித்து கண்ணாடி வழங்கல்
செயற்கை மாபிள் கண்களுக்கும்
மற்றும் பல் கட்டுதல், மிதப்புப் பற்களுக்கு
கிளிப்ஸ் செய்து கொடுத்தல்.
லக்ஷறி பல் கட்டுமிடம்
(சி/036)
232/A, கண்டி வீதி, சாவகச்சேரி.

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 புரட்டாதி 21 ஆம் நாள் (07.10.2002) திங்கட்கிழமை இதழ் : 07



நேற்றுமுன்தினம் இரவு நெடுந்தீவில் மக்களின் தாக்குதலுக்குள்ளான ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் பெயர்ப்பலகை கீழே கிடப்பதை முதலாவது படத்திலும் அலுவலக உபகரணங்கள் எரிவதை இரண்டாவது படத்திலும் காவலரண் எரிவதை மூன்றாவது படத்திலும் அங்கிருந்த வாகனங்கள் எரிக்கப்படுவதை நான்காவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: நெடுந்தீவு நிருபர்)*

# நெடுந்தீவிலிருந்த ஈ.பி.டி.பியினர் சகலரும் பொதுமக்கள் எதிர்ப்பினால் வெளியேற்றம்!

## கடற்படைப் படகுகளில் சென்றும் தரையிறங்க முடியாது திரும்பினர்

(நெடுந்தீவு)

**நெடுந்தீவில் இருந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) உறுப்பினர்கள் அனைவரும் - பொதுமக்களின் தாக்குதலைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேறினர். கடற்படையின் பாதுகாப்புடன் படகுகளில் அங்கு தரையிறங்க முயற்சித்தபோதும் மக்கள் கல்லெறிந்து தாக்கியதால் அவர்கள் மீளத் திரும்ப வேண்டிவந்தது.**

நெடுந்தீவுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கந்தப்பிள்ளை லோகநாதன் (வயது 50) என்ற பொதுமகன் ஈ.பி.டி.பியினரால் வெட்டப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து அங்கிருந்த ஈ.பி.டி.பி. அலுவலகம் மக்களால் தாக்கிச் சேதமாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது. ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவரும் மக்களால் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டார்.

ஈ.பி.டி.பி அலுவலகத்திலிருந்த ஏனையோர் அருகிலிருந்த பொலீஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்தனர்.

இதன்பின்னர் நேற்றுக்காலை யாழ். நகரில் இருந்து புறப்பட்ட மேற்படி கட்சியின் உறுப்பினர்கள் சுமார் 40பேர் பாராளுமன்ற உறுப்பினர் ந. மதனராஜன் தலைமையில் பொலீஸ் பாதுகாப்புடன் கடற்படையின் இரண்டு படகுகளில் நெடுந்தீவை நோக்கிச் சென்றனர்.

இவர்கள் நெடுந்தீவுக் கடற்கரையை காலை 9 மணியளவில்

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணானம் விநாசியர்



தனக்குத் தனக்கு எண்டவுடன் சுளகு படக்குப் படக்கு எண்டுதாம்!

## மிலிந்த, பலகல்ல திருமலை விரைவு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட ஆறு படையினரின் பெற்றோர்கள் உண்ணாவிரதம் இருந்து வரும் திருமலைக்கு நேற்று விரைந்து சென்ற அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் அரசின் சமாதான செயலணியின் பணிப்பாளர் பேர்னாட் குணதிலக, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, திருமலை கடற்படை கட்டளைத் தளபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோர் உண்ணாவிரதிகளுடன் கலந்துரையாடினர். இதன்போது உண்ணாவிரதத்தை கைவிடும்படி படையினரின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## முகாமிலிருந்த கிரனைட்டுகள், ரவைகள் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைப்பு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து ஆயுதங்கள் சிலவும் மக்களால் கண்டெடுக்கப்பட்டு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டன.

நெடுந்தீவில் வைத்து நேற்றுமுன்தினமிரவு மக்களால் பிடிக்கப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஆயுதங்கள் மறைக்கப்பட்டிருந்த இடத்தை அடையாளம் காட்டியதைத் தொடர்ந்து - மறைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று கைக்குண்டுகள் மற்றும் 700 இற்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் என்பவை பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டன.

இவற்றைக் கண்காணிப்புக் குழுவினர் பொலீஸாரிடம் கையளித்தனர்.

## தமிழ் அரசியற் கைதிகளுக்கு ஆதரவாக நாளைய விரிவுரைகள் பகிஷ்கரிப்பு!

### யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்

(நமது நிருபர்)

களுத்துறைச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் அரசியற் கைதிகளுக்கு ஆதரவாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நாளை விரிவுரைகளை 10 மணியிலிருந்து அடையாளமாக பகிஷ்கரிக்கவுள்ளனர்.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிறிலங்கா அரசின் தமிழின அழிப்பின் ஓர் அங்கமாகவும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் ஓர் வடிவமாகவும் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக ஜனநாயகமற்ற சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு சிறைச்சாலைகளில் இன்றுவரை எவ்வித

(10ஆம் பக்கம் பார்க்க)

## எமது உறுப்பினர்கள் பத்திரமாக யாழ். நகரம் திரும்பி விட்டனர்!

### ஈ.பி.டி.பி. முன்னாள் எம்.பி. தவராசா

மதுபோதையில் இருந்த சனக்கும்பல் தமது உறுப்பினர்களையும் அங்கத்தவர்களையும் தாக்கியதாகவும் தமது வாகனங்கள் உடைமைகளை எரித்ததாகவும் ஈ.பி.டி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா பி.பி.ஸி. தமிழோசைக்கு தெரிவித்தார்.

பொலிஸில் தாம் முறையிட்டதாகவும் தமது உறுப்பினர் ஒருவரை அச்சனக்கும்பல் பிடித்துச் சென்றதாகவும் பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்குத் தாம் முறையிட்டு அவர்கள் நெடுந்தீவுக்கு வந்து தமது உறுப்பினர்களை மீட்டுத் தந்ததாகவும் கூறினார்.

நெடுந்தீவிலிருந்து தமது உறுப்பினர்கள் பாதுகாப்பாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விட்டதாகவும், யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களிலும் தமது அலுவலகங்கள் இருக்கிறது என்றும் அவ்விடங்களில் எவ்வித அசம்பாவிதங்களும் இதுவரை இடம்பெறவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## உண்ணாவிரதம் இருந்து வரும் சில கைதிகள் நிலை கவலைக்கிடம்!

(கொழும்பு)

களுத்துறை, வெலிக்கடை, மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருந்து வரும் கைதிகளில் எட்டுப் பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிய வருகின்றது.

மட்டக்களப்புச் சிறையில் உளள

(10ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்தில் இயல்புநிலை ஏற்படுத்த புலிகள் - கடற்படையினர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் மக்களின் அன்றாட வாழ்வில் இயல்பு நிலையை மேம்படுத்துவதற்கு முன்முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாகக் கடற்படை அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று முக்கிய பேச்சுவார்த்தை நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் சார்பில் யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தீவக அரசியற் பொறுப்பாளர் செம்மணன், அருந்தவம் ஆகியோரும் -

கடற்படையினர் சார்பில் காரைநகர் கடற்படைத்தள பொதுமக்கள் தொடர்பு அதிகாரி சரத், ஊர்காவற்றுறை கடற்படை முகாம் கட்டளை (10ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த பட்ஜட்டில் பாதுகாப்புச் செலவு மூன்றிலிரண்டு பங்காகக் குறையும்!

## அரசாங்கத் தரப்பில் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் 2வது வரவு செலவுத்திட்டத்திற்கான மதிப்பீடுகள் நவம்பர் மாதம் 6ம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இது பற்றி அமைச்சர் ராஜித சேனாரட்ண கூறும் போது:- பாதுகாப்புக்கான செலவினத்தை மூன்றில் இரண்டு பங்காக குறைக்க முடியும் என அரசாங்கம் நம்புவதாகவும் உதவி வழங்கும் நாடுகள் தற்போது சமாதான சூழ்நிலை காரணமாக அபிவிருத்திக்காக கூடுதலான நிதிகளை வழங்கவுள்ளதாகவும் கூறினார்.

தற்போது ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் ஒதுக்கப்படும் ரூபா 35இலட்சம் அபிவிருத்திநிதி காலப்போக்கில் ரூபா 50 இலட்சமாக அதிகரிக்குமெனவும் குறிப்பிட்டார்.

மக்களின் பாவனைக்குரிய பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் அமைச்சரவை ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாவனையாளர்களுக்கு இந்த வரவுசெலவுத்திட்டம் நிவாரணத்தை அளிப்பதுடன் அபிவிருத்திக்கும் உதவுமெனவும் அவர் கருத்து தெரிவித்திருந்தார்.

இந்த வரவுசெலவுத்திட்டம் நாட்டில் துரித அபிவிருத்திக்கு வழிவகுப்பதுடன் பொது மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் என்று பொதுமக்களும் வர்த்தகர்களும் நம்புவதாகவும் அவர் மேலும் கூறினார்.

# 200 விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தருக்கு பற்றாக்குறை

(நமது நிருபர்)

இருநூறு விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் பற்றாக்குறை நிலவுவதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று விவசாய சேவைகள் திணைக்கள அதிகாரி தெரிவித்தார். யாழ்.அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் பேசிய அவர் தனதுரையில் -

நீண்டகாலமாக யாழ். மாவட்டத்தின் மண்ணின் இரசாயண பௌதீக இயல்புகள் பற்றிய எந்த ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் உரிய பசளைப் பிரயோகம், தாவர இனங்களைத் தெரிவு செய்தல், பொருத்தமான பாசனமுறைகளைக் கையாளுதல், மண்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகியவற்றில் யாழ்.விவசாயிகள் தோல்வி கண்டு வருகின்றனர். இது உற்பத்தியைப் பாதிக்கிறது.

ஆகவே இங்கு ஒரு மண்ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட வேண்டும். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் மண்பரிசோதனைக்கான உபகரணங்கள் முப்பது லட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டபோதும் அவை இங்கு வந்து சேரவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நியாப்(NEIAP)என்ற வடகிழக்கு நீர்ப்பாசன, விவசாய சேவைத் திட்டதின் கீழ் யாழ்.மாவட்ட குளங்கள் புனரமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் தமது திணைக்களத்தின் சார்பில் கருத்துக்கூறிய அவர் பெருமளவு பயிர் நிலங்கள் பயன்படுத்தப்படாமல் கண்ணி வெடிகள் விதைக்கப்பட்ட வயல்களாக உள்ளன என்றும் அந் நிலங்கள் விவசாயத்துக்குப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக விரைவில் கண்ணி வெடிகள் அகற்றப்படல் வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## ஆசிரியர் தின விழா

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா இன்று பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு யாழ் பேராயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டு பின்னர் ஆசிரியர்கள் பவனியாக பாடசாலை விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவர். பின்னர் அதிபர் தலைமையில் கலைநிகழ்வுகள் இடப்பெறவுள்ளன.

## மீளக்குடியமர்வோருக்கு உதவிப்பணம்

(பருத்தித்துறை)

மாதாந்த உதவிப்பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவில் உதவிப்பணம் பெற்றுவந்தவர்கள் கடந்தகால இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து வன்னிப்பகுதிக்குச் சென்றிருந்தனர் பின்னர் வன்னிப்பகுதியில் அவர்களுக்குரிய உதவிப் பணம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது மீண்டும் அவர்கள் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியேறியதை அடுத்து அவர்களுக்கு இதுவரை காலமும் வழங்காத உதவிப் பணம் நிலுவையுடன் சேர்த்து ஒக்டோபர் மாதத்திலிருந்து வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் என். இராசலிங்கம் அவர்கள் மேற்கொண்ட துரித நடவடிக்கையால் உதவிப்பணம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இல15)

# இராணுவக் கொமாண்டோக்கள் பயிற்சி முடித்து வெளியேறினர்

(கொழும்பு)

இராணுவத்தின் கொமாண்டோப் படைப்பிரிவைச் சேர்ந்த 32ஆவது அணி பயிற்சிகளை முடித்து வெளியேறியிருக்கின்றது.

191 கொமாண்டோப் படையினர் பயிற்சியை முடித்து வெளியேறும் வைபவத்தில் கலந்து கொண்டு பிரிகேடியர் சந்திர வன்ச அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

இதையடுத்து பரசூட் வீரர்களின் கண்காட்சியும், காட்சி நிகழ்வுகளும் இடம் பெற்றன.

# உலக ஆசிரியர் தினத்தைக் கொண்டாடும் உரிமையில்லாத யூனியன் கல்லூரி மாணவர்கள்!

## தெல்லிப்பளைக் கோட்ட மாணவர் ஒன்றியம் கண்டனம்

எங்கள் தமிழ் மாணவர்களின் உரிமையும், சுதந்திரமும் நீண்டகாலமாக பறிக்கப்பட்டு, மறிக்கப்பட்டு, மறைக்கப்பட்டு வந்தமை யாவரும் அறிந்த உண்மை.

ஆனால் இன்றைய நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்து முதலாம் கட்ட பேச்சுவார்த்தை முடிவடைந்த நிலையிலும் இராணுவம் பாடசாலைகளையும், கோயில்களையும், வீடுகளையும் முற்றுகையிட்டு அதனைத் தங்களது உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தி, அவற்றின் முன்பு "அனுமதியின்றி உட்புகுபவர்களுக்கு எதிராக தங்களின் பலம் பிரயோகிக்கப்படும்" என விளம்பரப்படுத்தி எச்சரிக்கை விட்டுவிட்டு மாணவர்களாகிய எம் சமுகத்தின் முழுச்சுதந்திரத்தினையும் சந்தோசத்தையும் பிடுங்கி எடுத்துவிட்டார்கள். என தெல்லிப்பளைக் கோட்ட மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கையில்-

மாணவர்களுக்கு கல்வி கற்க இடவசதியோ அன்றி ஆசிரியர்களின் ஒழுங்கான கற்பித்தலோ மட்டும் போதாது. மாணவன் சுதந்திரமாக தனது திடமான, சந்தோசமான மன நிலையில் இருந்தாலே கல்வி கற்க முடியும். ஆனால் இன்று பல பாடசாலைகளில் இவை இல்லாமல் போய் விட்டன. இன்று யூனியன் கல்லூரி மாணவர்கள் மிகப்பெரும் சிரமங்களை எதிர்நோக்கி தங்களின் கல்வியை தொடர்ந்து வருகின்றார்கள். இவை யாவரும் அறிந்ததொன்று. பல அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கும் இப் பாடசாலைக்கு இப்படியான கெடுபிடிகள் மேலும் பெரும் சிரமத்தை கொடுக்கும்.இவை கண்டிக்கத் தக்க விடயங்களாகும்.

மாணவர்களின் சுதந்திரத்தை பறித்துவந்த இராணுவம் யூனியன் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த ஆசிரியர் தினத்தைக் கொண்டாட மறுப்புத் தெரிவித்ததையிட்டு எமது கல்விச் சமுகம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது. மாணவர்களின் இணைப் பாடவிதான செயற்பாடாகிய விளையாட்டுப் போட்டியைக்கூட யூனியன் கல்லூரி மைதானத்தில் நடாத்த அனுமதிக்காததையும் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது. மேலும் இப்படியான நடவடிக்கைகள்யாவும் உடனடியாக நிறுத்தப்பட்டு, பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டு இருக்கும் பாடசாலைச் சுற்றாடலையும், அனைத்துப் பகுதிகளை யும் உடனடியாக அப் புறப்படுத்தி கல்விச் சமுகத்தினர் யாவருக்கும் அனுகூலமான சூழலை ஏற்படுத்தி கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

இல்லையெனில் கல்விச் சமுகத்தினர், பொது அமைப்புக்கள், மக்கள் யாவரும் ஒன்றிணைந்து வெகுஜனப்போராட்டங்களை மேற்கொள்ள வேண்டிய ஒரு பாரிய நிலைமை ஏற்படும். இதனைக் கருத்தில் கொண்டு உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பலாங்கொடையில் இரு வீடுகள் மண்சரிவில் புதைந்தன!

## ஐந்து பேர் பரிதாப மரணம்

பலாங்கொடைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற மண்சரிவில் இரண்டு வீடுகள் புதையுண்டு போயிருக்கின்றன. இச் சம்பவத்தில் ஐந்து பேர் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது

வீதியில் 50 மீற்றர் தூரம் மண்ணினால் மூடப்பட்டிருப்பதால் இவ் வீதியூடான போக்குவரத்துக்கள் யாவும் தடைபட்டிருக்கின்றன.

# விளையாட்டு

## பெங்களூர் 3 நாள் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவு

(பெங்களூர்)

பெங்களூரில் நடைபெற்ற, இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இடையிலான 3 நாள் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை அணி முதல் இன்னிங்சில் 8 விக்கட் இழப்புக்கு 275 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் தினேஷ் மொங்கியா ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மே.இந்தியத் தீவுகள் அணி மூன்றாவது நாள் போட்டி முடிந்த போது 4 விக்கட் இழப்புக்கு 606 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

வெவெல் ஹெய்ஸ் 147 ஓட்டங்களையும், ராவேஸ் ஷர்வான் ஆட்டமிழக்காமல் 140 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

## ஆசிய விளையாட்டுப் போட்டி சீனா பட்டியலில் முதலிடம்!

(புஷான்)

தென்கொரியாவின் புஷான் நகரில் நடைபெற்று வரும் 14வது ஆசிய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியின் ஏழாவது நாள் முடிவில் சீனா முதலிடத்தை பெற்றிருக்கின்றது. பதக்கப்பட்டியலில் முன்னணியிலுள்ள நாடுகளின் விபரம் வருமாறு:

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சீனா | 92 | 37 | 31 |
| தென் கொரியா | 30 | 34 | 43 |
| ஜப்பான் | 26 | 40 | 35 |
| கசகஸ்தான் | 08 | 07 | 11 |
| வடகொரியா | 06 | 08 | 10 |

# கெடுபிடி குறையாததன் வெளிப்பாடே யூனியன் மாணவர் மீதான அடாவடித்தனம்!

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

சிறிலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு எட்டு மாதங்கள் கடந்துள்ளன ஆனால் இன்று வரை சிறிலங்காவின் ஆயுதப்படையினரின் மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் மீதான அடாவடித்தனங்கள் குறையவில்லை. இதன் தொடர்ச்சியாக யூனியன் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த உதைபந்தாட்டப் போட்டிக்கும் இன்று நடக்கவிருந்த ஆசிரியர் தின நிகழ்விற்கும் சிறிலங்கா இராணுவம் தடைவிதித்துள்ளது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

ஆசிரியர் தினம் என்பது ஆசிரியர்களை கௌரவிக்கும் ஓர் நிகழ்வு இந்நிகழ்வைக் கூட தமது பாடசாலைகளில் சுதந்திரமாக நிகழ்த்த முடியாத நிலையில் இன்று தமிழ் கல்விச் சமுகமுள்ளது சிறிலங்கா இராணுவத்தினரின் கெடுபிடிகள் ஆசிரிய, மாணவ சமுகங்களை திட்டமிட்டு அவமானப்படுத்தும் செயல்களாகவுள்ளன. இவ்வாறான பொறுபற்ற செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சிறிலங்கா இராணுவம் இலங்கைத் தீவில் நிலவும் சூழ்நிலையை குழப்பும் விதத்தில் மாணவர் சமுகத்தை சீண்டி வருகின்றது. இச் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் இல்லையேல் மாணவர் சமுகம் தமது உரிமைகளுக்காக மேலும் போராடுவது தவிர்க்க முடியாததாகும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

## வரலாறு

மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை முத்துத்தம்பிப் பிள்ளையின் யாழ்ப்பாண சரித்திரம் ஆகிய நூல்கள் கலாநிதி க.குணராசாவின் மீள் வாசிப்புடன் வெளிவந்துள்ளன. ஸ்ரீ லங்கா, பூபாலசிங்கம் புத்தகசாலைகளில் பெறலாம்.

சி/030

## வரிவிளம்பரம்

### விற்பனையாகின்றது

பொது அறிவு, அழகியல், 'உளச்சார்பு பொது அறிவு மொழித் திறன்', சனி மாற்றம் உங்களுக்கு எப்படி?, 2003 ல் நவக்கிரகங்கள் உங்களுக்கு அளிக்கும் யோக பலா பலன்கள் சோதிடர் V.A.சிவராசா வெளியிட்டது என்று கேட்டு வாங்குங்கள் (004)

# ஜப்பான் உயர்மட்ட குழுவில் வன்னிக்கு வருவோர் விபரம்!

(கிளிநொச்சி நிருபர்)

வன்னிக்கு நாளைமறுதினம் வரவுள்ள ஜப்பானிய உயர்மட்டக் குழுவினரின் விபரம் வெளியாகியுள்ளது.

ஜப்பானின் சர்வதேச கூட்டுறவு முகவரகத்தின் ரி.ராகுச்சி தலைமையிலான இக்குழுவில் ஜப்பானிய வெளியுறவு அமைச்சின் - எரிட் எய்ட் திட்ட நிர்வாகம் மற்றும் கொள்கை வகுப்பைச் சேர்ந்த செல்வி என்.நரினி கிரி, அகதிகளுக்கான ஐ.நா.உயர் ஆணையக மூத்த தொடர்பு அதிகாரி செல்வி.ப(f)ற்றிமா செரீவ்ரொன் ஜப்பானிய தூதரக முதலாம் செயலாளர் டொக்டர் செல்வி என்.இசெக்கி, தூதரக அதிகாரி எஸ்.எச்.கோபயாஷி ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். 9ஆம் திகதி இக்குழு யாழ்ப்பாணம் வந்து அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின் விமானம் மூலம் 10ஆம் திகதி கொழும்புக்குத் திரும்பவுள்ளனர்.

இக்குழுவினர் வன்னிப் பகுதியின் தற்போதைய நிலைவரம் மற்றும் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்கள் குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை முக்கியஸ்தர்கள் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் இக்குழுவினர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

# மெதிரிகிரிய தாக்குதல் சம்பவத்துடன் ஐ.தே.க. எம்.பிக்கு தொடர்பில்லை

## கட்சியின் செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு நிருபர்)

மெதிரிகிரிய தாக்குதல் சம்பவத்தில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சிட்னி ஜெயரத்னவுக்குத் தொடர்புகள் இருப்பதாகத் தமக்குத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என ஐ.தே.க. செயலாளர் செனரத் கப்புக்கொட்டுவ தெரிவித்துள்ளார்.

தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சிட்னி ஜெயரத்னவுக்கும் சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் ஊடகவியலாளர்களைத் தாக்கியது தொடர்பான சம்பவத்திற்கும் தொடர்பு இருந்தால் அவர்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பாக சிட்னி ஜெயரத்னவின் சகோதரரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தமை தெரிந்ததே. (34)

# தீவுப்பகுதியில் கட்டாக்காலிகள் பெருகி பெரும்போக நெற்செய்கைக்கு ஆபத்து!

(மண்கும்பான்)

தீவுப்பகுதிகளின் கட்டாக்காலி மாடுகள் பெருகியுள்ளதால் பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்படும் ஆபத்து உள்ளதாக இப்பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

1990 ஆம் ஆண்டில் தீவகத்தில் இருந்து பொதுமக்கள் இடம்பெயர்ந்து சென்றபோது கால் நடைகள் அநாதரவாக விடப்பட்டிருந்தன. அவை பெருகிக் கட்டாக்காலிகளாகத் திரிந்து கொண்டிருப்பதால் காலபோக நெற்செய்கையை முழு அளவில் மேற்கொள்ள முடியாதிருப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கட்டாக்காலி கால் நடைகளைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே முழு அளவிலான காலபோக நெற்செய்கையை - மேற்கொள்ள முடியும் என அவ்விவசாயிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (53)

## படையினர் சிரமதானம்

(வரணி)

வரணி மத்திய மருந்தகம் படையினரால் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த 4ஆம் திகதி முதல் மத்திய மருந்தகத்தை 52ஆவது படையணியைச் சேர்ந்த படையினர் துப்பரவு செய்து வருகின்றனர். (27)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அனைத்து தமிழ்மக்களும் போராடவேண்டும்

## கிருஷ்ணபிள்ளை எம்.பி. தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்துவரும் அரசியல் கைதிகளின் நிலைமை நாளுக்குநாள் மோசமடைந்து வருவதாகவும், போராட்டம் தொடர்ந்து நீடித்தால் கைதிகளின் நிலை ஆபத்தான நிலைக்குப் போய்விடும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை (வெள்ளிமலை) தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் உண்ணாவிரதிகளைச் சென்று பார்வையிட்ட பின்னரே அவர் இவ்வாறு கூறினார்.

போராட்டத்தில் ஈடுபடும் கைதிகளின் நிலை மோசமடைந்து வருவதைத் தாம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர் மிலிந்த மொறகொட, ஜயலத் ஜயவர்த்தன ஆகியோருக்கு பக்ஸ் மூலம் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கைதிகளைப் பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவித்த அவர், அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அனைத்துத் தமிழ் மக்களும் போராட்டங்களை நடத்துவதற்கு முன்வரவேண்டும் என்றும், இதன் மூலமே கைதிகளின் விடுதலையைச் சாத்தியமாக்க முடியும் என்றும் தெரிவித்தார்.

# மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் மட்டு. சிறைக் கைதிகளுக்கு ஆதரவாக சுழற்சிமுறை உண்ணாவிரதம் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துவரும் 16 அரசியல் கைதிகளுக்கும் ஆதரவாக அமிர்தகழிப் பிள்ளையார் ஆலயத்தில் சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தை நேற்றுமுதல் நடத்திவருகின்றனர்.

சிறையிலுள்ள கைதிகளின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கடந்த சனிக்கிழமை ஆனைப்பந்தி சித்தி விநாயகர் ஆலயத்தில் கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். இக்கூட்டத்திலேயே ஞாயிற்றுக்கிழமை முதல் மாமாங்கப் பிள்ளையார் ஆலயம முன்பாக சுழற்சி முறையிலான உண்ணாவிரதம் இருக்கும் முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

நேற்றுக்காலை முதல் இடம பெற்றுவரும் இந்த அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோர் மற்றும் உறவினர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு இடையில் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பான உரிய பதில் தமக்குத் தரப்படாவிட்டால் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக எச்சரித்துள்ளனர்.

இதேவேளை -

மட்டக்களப்புச் சிறையில் உண்ணாவிரதமிருந்து வரும் கைதிகளில் ஒருவர் மயக்கநிலை அடைந்துள்ளார். இவருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கச் சிறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தபோதும் உண்ணாவிரதிகளின் எதிர்ப்பினால் அம்முயற்சி தடுக்கப்பட்டுள்ளது.

# பொங்குதமிழை ஒத்ததாக ஊவா மாகாணத்தில் விழா

(கொழும்பு)

வட-கிழக்குப் பகுதிகளில் நடத்தப்பட்ட பொங்குதமிழ் நிகழ்வை ஒத்ததாக மலையகத்தில், ஊவா மாகாண சாகித்திய விழா நடத்தப்படவுள்ளதாக மாகாண அமைச்சர் வே.குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

பதுளை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ள இந்த சாகித்திய விழாவுக்குத் தேவைப்படும் நிதி உதவியை அமைச்சர்கள் மூலம் பெறத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கல்வயல் பகுதியில் திருடர் தொல்லை அதிகரிப்பு

(சரசாலை)

கல்வயல் பகுதியில் தினமும் இரவு வேளைகளில் திருடர்கள் தமது கைவரிசையை காட்டி வருகின்றனர். இதனால் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் இரவு வேளைகளில் வீதிகளில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வெறுமையாக உள்ள வீடுகளில் உள்ள பொருட்கள், ஓடுகள், மரங்கள் என்பன இவர்களால் களவாடப்பட்டு வருகின்றது. இரவு வேளையில் நிம்மதியாக நித்திரை செய்யக்கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (34)

# ஊன்றுகோல்களை ஒப்படைக்க வைத்திய அதிகாரி கோரிக்கை

(வடமராட்சி)

மந்திகை மருத்துவமனை பௌதீக சிகிச்சைப் பிரிவில் ஊன்றுகோல்களை பெற்றவர்கள் அவற்றினை மீள ஒப்படைக்குமாறு பௌதீக சிகிச்சைப் பிரிவில் பொறுப்பதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

எம்.எஸ்.எவ்.நிறுவனத்தினரால் மிதிவெடிகள், விபத்துக்கள், யுத்தத்தின்போது கால்களை இழந்தவர்களுக்கு பௌதீக சிகிச்சை வழங்கப்பட்டு பின்னர் ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டன.

வழங்கப்பட்டு நீண்ட காலமாகவும் அதனை கையளிக்காதவர்களை உடன் சிகிச்சை நிலையத்தில் மீளச்செலுத்தி, செலுத்திய கட்டணத்தினைப் பெறுமாறு அறிவித்துள்ளார். (23)

# சிறையிலுள்ள நெடுமாறனை சந்திக்க ஜோசப் எம்.பிக்கு அனுமதி மறுப்பு!

(சென்னை)

பொடா சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர் தேசிய



பழ.நெடுமாறன்

இயக்கத் தலைவர் நெடுமாறனைச் சந்தித்துப் பேச தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நெடுமாறனைச் சந்தித்துப் பேச கடந்த வெள்ளிக்கிழமை காலை11 மணிக்கு ஜோசப் பரராஜசிங்கம் கடலூர் மத்திய சிறைக்குச் சென்றிருந்தார்.

நெடுமாறனைச் சந்தித்துப் பேச வேண்டுமாயின் தமிழக அரசின் அனுமதியைப் பெற்று வருமாறு சிறை அதிகாரி நிஜாமுதீன் கூறி ஜோசப் பரராஜசிங்கத்தைத் திருப்பி அனுப்பியுள்ளார்.

தனிப்பட்ட ரீதியான சந்திப்பாக இருந்தாலும் வெளிநாட்டவர் என்பதால் அரசின் அனுமதி கட்டாயம் தேவை என அவர் தெரிவித்துள்ளார்.

நெடுமாறனைப் பார்க்கத் தன்னை அனுமதிக்காதமை குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஜோசப் பரராஜசிங்கம், மிகப்பெரிய ஜனநாயக நாட்டில் சிறையிலுள்ள ஒருவரை மனிதாபிமான நோக்கில் சந்திக்க முடியாதிருப்பது வியப்பாக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# இருவருடங்களின் பின் தென்மராட்சிப் பகுதியில் காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யுத்த நிலை காரணமாக கடந்த இருவருடங்களாக நெற்செய்கை பாதிக்கப்பட்டிருந்தது.

நிலைமை சுமுகமடைந்துள்ளதையடுத்து தென்மராட்சிப் பகுதி விவசாயிகள் நெற்செய்கையில் அதிக ஆர்வம் காட்டிவருகின்றனர்.

காலபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதையடுத்து அடுத்த வருடம் ஜுன் 30ஆம் திகதி வரை கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு விவசாயப்பெரும்பாக உத்தியோகத்தர் கூறியுள்ளார்.

# கோயில் குடியிருப்பு மக்களுக்கு உதவிப்பொருட்கள்

(சரசாலை)

சாவகச்சேரி கோயில் குடியிருப்பு பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களிற்கு இன்று யுனிசெவ் நிறுவனத்தினால் நிவாரண உதவிப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதிப்பத்திரங்கள் கோயில் குடியிருப்பு கிராம அலுவலர் பணிமனையில் வைத்து இன்று காலை 10.00 மணிக்கு முன்னர் வழங்கப்படும் எனவும் இதுவரை உதவிப் பொருட்கள் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களிற்கே தற்போது வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (34)

# சின்னஞ்சிறு செய்திகள்

## மிதிவெடிகள் அகற்றப்பட்டன

(வடமராட்சி)

மருதஙகேணி நகரிலுள்ள சந்தை, அதனை அண்டிய பகுதிகளில் கடந்தகால யுத்த நடவடிக்கையின் போது புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள், பொறிவெடிகளை மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் அகற்றப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் நிலை கொண்டிருந்த இப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்த இம்மிதிவெடிகள் காணப்பட்டமையால் மக்கள் பாவனைக்கு தடுக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (23)

## ஆசிரியர்தின விழா

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கிலுள்ள உடுத்துறை மகாவித்தியாலயத்தின் சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் வ.தவராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுவதுடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (23)

## கண்டாவளையில் இடம்பெயர் சேவை

(கிளிநொச்சி)

கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் இடம்பெயர் சேவை ஒன்று தருமபுரம் மகாவித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12ஆம், 13ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இடம்பெயர் சேவையில் அனைத்து திணைக்களங்களும் பங்குகொள்ளும் என்றும், விவசாயிகளுக்கான காப்புறுதி வசதிகள் குறித்து முக்கியமான கவனம் செலுத்தப்படும் என்றும் தெரியவருகின்றது.

## கணினி பயிற்சி இயக்குநர்களுக்கு

யாழ். மாவட்டத்திலுள்ள கணினிப் பயிற்சி நிலையங்களின் இயக்குநர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை பி.ப 4.30 மணியளவில் பொற்பதி வீதியில் உள்ள நர்மகள் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. சகல கணினிப் பயிற்சி நிலையங்களின் இயக்குநர்களையும் தவறாது சமுகம் தருமாறு தமிழ் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

# நவீன தொழில்நுட்ப அறிமுகம்
# அமெரிக்காவில் துறைமுக தொழிலாளர் பாரிய வேலைநிறுத்தத்தில் குதித்தனர்!

## தற்கொலை செய்வதா என்று கேள்வி

- ☆ இருநூறு சரக்குக் கப்பல்கள் பசுபிக் சமுத்திரத்தில் காத்திருப்பு!
- ☆ அமெரிக்காவுக்குள் நுகர்வுப்பொருள் பற்றாக்குறை!!
- ☆ நாளொன்றுக்கு பல மில்லியன்கள் டொலர் இழப்பு!!!




(வொஷிங்டன்)

சியாட்டில் (Seattle), சன்பிரான்ஸிஸ்கோ (San Francisco), லொஸ் ஏஞ்சல்ஸ் (Los Angeles) ஆகிய முக்கிய துறைமுகங்கள் உட்பட அமெரிக்காவின் மேற்குக் கரையில் உள்ள பசுபிக் சமுத்திரத்தை நுழைவாயிலாகக் கொண்ட அனைத்துத்துறை முகங்களும் மூடப்பட்டுள்ளன.

நவீன தொழில்நுட்பத்தை அங்கு அமெரிக்க அரசு அறிமுகப்படுத்தியதையடுத்து புதிய தொழிலாளர்கள், பணியாளர்களை மாற்றுகின்ற திட்டம் அமுலாகவிருந்தது.

வேலை இழக்கும் பரிதாபகரமான கட்டத்திற்கு இத்தொழிலாளர்களை துறைமுக ஒப்பந்தகாரர்கள் இட்டுச் செல்கின்றனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து இவ்வேலை நிறுத்தம் ஆரம்பமாகியுள்ளது.

தாங்கள் அனைவரும் வேலை இழந்து தற்கொலை செய்வதா என்று குரல் எழுப்பும் இவர்கள் நவீன தொழில நுட்பத்திலும் தாமே பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

இவ்வேலைநிறுத்தம் காரணமாக சர்வதேச கப்பல் நிறுவனங்களின் இருநூறுக்கும் மேற்பட்ட பாரிய சரக்குக் கப்பல்கள் துறைமுகங்களுக்குள் நுழையமுடியாதபடி பசுபிக் சமுத்திரத்தில் காத்திருக்கின்றன.

இதன்காரணமாக அமெரிக்க வர்த்தகமும், சர்வதேச நாடுகளின் வர்த்தகமும் பாரிய அளவில் பாதிக்கப்படுமென பொருளியல் நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தென்கிழக்காசியாவின் 'வேங்கைப் பொருளாதாரம்' (Tiger Economy) சரிந்ததுபோல அமெரிக்கப் பொருளாதாரமும் சரியுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

இல்வேலைநிறுத்தம் காரணமாக நாள் ஒன்றுக்கு பல மில்லியன்கள் டொலர் இழப்பை அமெரிக்கப் பொருளாதாரம் சந்திக்கின்றது.

# முதலில் பணிக்குத் திரும்புங்கள் பின்னர் பிரச்சினையை தீர்க்கலாம்

## இப்படிக் கூறுகிறார் புஷ்

(வொஷிங்டன்)

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு பணிக்குத் திரும்பவேண்டுமென அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதன்பின்னர் துறைமுக ஒப்பந்தகாரர்கள், கப்பல் நிறுவனங்கள் ஆகியோருடன் தொழிலாளர் பேச்சுக்கள் மூலம் தங்கள் தொழிற்பிணக்கை (Labour Dispute) தீர்த்துக் கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார். அத்துடன் இவ்விடயத்தில் உடனடியாக ஒரு முடிவுக்கு வரும்படியும் அமெரிக்க ஜனாதிபதி சம்பந்தப்பட்ட இரு தரப்பினரையும் எச்சரித்தார்.

# அமெரிக்க மக்கள் பொருள் தட்டுப்பாட்டால் அவதி!

(வொஷிங்டன்)

உணவுப் பொருட்கள், கைத்தொழில் உதிரிப்பாகங்கள், விவசாய உதிரிப்பொருட்கள் ஆகியவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு அமெரிக்காவுக்குள் ஏற்பட்டுள்ளது.

இதனால் இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்கள், மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனங்கள், விவசாய உற்பத்திச் சாதன நிறுவனங்கள் என்பன தமது உற்பத்தி நடவடிக்கைகளில் மந்தமான சூழ்நிலையைச் சந்திக்கின்றன. அமெரிக்காவின் எழுபது வீதமான ஏற்றுமதி, இறக்குமதி நடவடிக்கைகள் துறைமுகங்கள் மூலமே நடைபெறுகின்றன.

## அமெரிக்க விவகாரம் முதலாளி - தொழிலாளி வர்க்கப் பிரச்சினை?

(மொஸ்கோ)

அமெரிக்கத் துறைமுகங்களில் இடம்பெறும் தொழிலாளர் வேலை நிறுத்தம் துறைமுக ஒப்பந்தகாரர்கள் மற்றும் கப்பல் நிறுவனங்களின் முதலீட்டாளர்கள் ஆகியோரைக் கடுமையாகப் பாதித்திருக்கிறது. இதன் காரணமாக மீண்டும் வர்க்க ரீதியான முரண்பாடுகள் உலகில் தலைதூக்கியுள்ளன என்பதற்கான ஆரம்ப அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன என்று 'ரஷ்யாவின் குரல்' வானொலியில் ரஷ்ய சோஷலிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கத் தொழிலாளர் வேலைநிறுத்தம் ஆசியாவிலும் எதிரொலிப்பு

(ரோக்கியோ)

அமெரிக்கத் துறைமுகங்களில் இடம்பெறும் வேலைநிறுத்தம் காரணமாக அபிவிருத்தி அடைந்து வரும் ஆசிய நாடுகளில் உணவுப் பொருட்களுக்கான, மின்சார, இலத்திரனியல் சாதனங்களுக்கான தட்டுப்பாடு ஏற்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

அபிவிருத்தி அடைந்த ஆசிய நாடுகளில் கைத்தொழிற்றுறை மிக மோசமாகப் பாதிப்படையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அமெரிக்கர் சந்திக்கும் கறுப்புச்சந்தை

(வொஷிங்டன்)

துறைமுக ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக அமெரிக்க உள்நாட்டு நுகர்வுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பொருட்களைப் பதுக்குதல், அவற்றைக் கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விற்றல் போன்ற பாதக நிலைமைகள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

# துறைமுக வேலைநிறுத்தத்தால் சதாமுக்குச் சாதகமான நிலைமை!

## ஈராக் வெளியுறவு அமைச்சர் அரபுநாடுகளிடம் ஆதரவு தேடுகிறார்

(பாக்தாத்)

அமெரிக்கத் துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தினால் அமெரிக்கா தனது உள்நாட்டு விவகாரத்தில் முழுமையான கவனத்தைச் செலுத்த வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது.

இதன் காரணமாக அதன் எதிரி நாடான ஈராக்குக்கு கால அவகாசம் கிடைத்துள்ளது. அதனை நன்கு பயன்படுத்த சதாம்ஹுசைன் முற்பட்டுள்ளார் போலத் தோன்றுகின்றது என்று அமெரிக்கச் செய்தியாளர்கள் ஊகம் வெளியிட்டுள்ளனர்.

ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் நாஜிசப்ரி, பஹ்ரைன் மன்னரின் மாளிகைக்கு விஜயம் செய்துள்ளார்.

அங்கு அவர் மன்னரின் இராஜதந்திர ஆதரவை எதிர்பார்த்து பேச்சுக்களில் ஈடுபட்டார்.

ஐ.நா. ஆயுதப் பரிசோதனைக் குழுவிற்கு ஈராக் வழங்கவிரும்பும் ஒத்துழைப்பு தமக்கு திருப்தியளிப்பதாக மன்னர், ஷப்ரியிடம் தெரிவித்தார்.

ஈராக் வெளியுறவு அமைச்சு, அமெரிக்கத் தாக்குதலுக்குத் தள ஆதரவு வழங்கவேண்டாம் என அமெரிக்க ஆதரவு முஸ்லிம் நாடுகளிடம் கேட்டுள்ளது.


# ஈராக் விவகாரத்தில் விட்டுக்கொடுக்க முடியாது

## அமெரிக்க அதிபர் தெரிவிப்பு

(வொஷிங்டன்)

எதிர்கால சமாதானத்தையும் அமெரிக்காவின் பாதுகாப்பையும் கருதி அமெரிக்கா எடுக்கவுள்ள நடவடிக்கைகளில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை என்று மீண்டும் அறிவித்திருக்கிறார் அமெரிக்க அதிபர் புஷ்.

காலத்தை இழுத்தடிக்காமல் ஒரு முடிவுக்கு வரவேண்டிய கட்டாயம் ஈராக்குக்கு உள்ளது. இல்லையேல் பலப்பிரயோகம் செய்வதை அமெரிக்காவால் தவிர்க்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.



வெள்ளை மாளிகை முதலில் செய்யப்போவது என்ன? வேலைநிறுத்தக் காரர்களுடன் பேச்சுவார்த்தையா? அல்லது ஈராக்குக்குக்கெதிரான இராணுவத் தாக்குதலா? உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் நெருக்கடி நிலைமையை சந்தித்து நிற்கிறது அமெரிக்க நிர்வாகம்.




# ஆட்சிக் கவிழ்ப்புச் சதிபற்றி வெனிசுவேலா தலைவர் பீதி

(வெனிசுவேலா)

வெனிசுவேலா தலைவர் ஒகோ சவெஸ் தனக்கெதிராக ஆட்சிக கவிழ்ப்புச் சதி இடம்பெறுகிறது என்று அச்சம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறுமாதங்களுக்கு முன்பு நடைபெற்ற கவிழ்ப்பு முயற்சியில் சம்பந்தப்பட்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர்களும் இராணுவத்தை விட்டு விலகிய இராணுவ ஜெனரல்களும் கூட்டுச் சேர்ந்து இச்சதியில் இறங்கியுள்ளனர் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அதேவேளை -

வெனிசுவேலாவின் தலைநகரில் பத்துலட்சம் மக்கள் பங்குபற்றும் அரசுக்கெதிரான பேரணி ஒன்று ஒழுங்குபடுத்தப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டர் வெனிசுவெலாவுக்கு விஜயம் செய்து ஆளும் தரப்பினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையே ஒரு இணக்கப்பபாட்டைக் கொண்டுவருவதற்கு மத்தியஸ்தம் செய்திருந்தார். எனினும் அவரது முயற்சி தோல்விகண்டது.

## றியோடிஜெனிரோவில் பதற்றம்

(லண்டன்)

பிறேஸிலில் இடம்பெறுகின்ற தேர்தலையடுத்து அங்கு பதற்ற நிலைமை காணப்படுகின்றது. தலைநகரமான றியோடி ஜெனிரோவில் ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமான ஆயுதப்படையினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

## ஒசாமா ஆச்சரியங்களை நிகழ்த்துவார்!

சவுதியின் புலனாய்வு நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் இளவரசர் றெக்கி அல்பைசல் லண்டனில் இருந்து வெளிவரும் சவுதி அரேபியப் பத்திரிகைக்கு பேட்டியளிக்கையில் ஒசாமா பின்லாடன் 5000 அல்கெய்டா அங்கத்தவர்களுடன் உயிருடன் இருப்பதாகவும் காலம் கனியும் போது பெரும் ஆச்சரியங்களை நிகழ்த்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.


## பொஸ்னியத் தேர்தல்

(லண்டன்)


பொஸ்னியாவில் இடம்பெற்ற தேர்தலில் தீவிரமான தேர்தல் முறைகேடுகள் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் விழுந்த வாக்குகளில் ஐம்பது வீதமானவை கள்ள வாக்குகளாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பல இடங்களில் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மிரட்டப்பட்டதாகவும் அறியப்படுகின்றது.




ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலை எதிர்த்து வொஷிங்டனில் பிரிட்டிஷ் தூதரகத்திற்கு அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.



# இலக்கியச் சோலை

## ஒரு பட்டாம் பூச்சிக் காலம் பற்றிய மீள் நினைவு

பட்டாம் பூச்சி பிடித்துத் திரிந்த காலத்தில்
உன் மீது
எனக்குக் காதல் வந்தது.

இரவுச் சிறகுகளில்
உன் உருவம் ஒடுங்கிப் பின் வளரும்
என்னுள் ஒரு கனவாய்.



ஒளிப்பிளம்பு உதிர்த்திப் போன
உன் பார்வைகளில்
சிக்குண்டுபோன எனது காலம்
மீட்சி பெற்றெழுந்தது ஒரு கவிதையாய்.

இப்போது நீ ஒரு
பருவமடைந்த தென்றலாய்
பட்டாம் பூச்சிக் காலத்தை
உன் நிகழ் காலத்தில் இருந்து
உதிர்த்தி விட்டிருக்கிறாய்.

நான்!
நீ முன்பு உதிர்த்திப் போன பார்வைகளால்
என்னுள் துளிர்த்துக் கொண்ட
இலைகள் பற்றிய வர்ணனைகளை
புனைந்து கொண்டே இருக்கிறேன்
உயிர்ப்புறும் எனது கவிதைகளில்
என் இரவுச் சிறகுகளில்
உன் உருவம் ஒடுங்கிப் பின் வளரும்
என்னுள் அது ஒரு நீண்ட கனவாய்.

தானா. விஷ்ணு.

## A - 9 என நீளும் நினைவுகள் (பகுதி 1)



இந்த வீதியில் பொங்கிய இரத்தமும்
எப்படி அதற்குள்ளே வடிந்தது ?
இந்த வீதிக்காய்ப் பாய்ச்சிய வேர்வையும்
என்று காய்ந்தது? வீதி மருங்கெலாம்
சிந்தி.. ஊர்களை மூழ்கடித்தோடிய
தேம்பி அழுத நம் மக்களின் கண்ணீரும்...
அந்தரத்துக்கா ஆவியாய்ப் போயிற்று?
'அன்றை' எண்ண நெஞ்செரிமலை ஆகுது.

தொன்றுதொட்டு எம் தொட்டில் நிலத்துக்குத்
'தொடுவை' ஆனது இக்கண்டி வீதியே!
வன்னியாண்ட நம் செந்தமிழ் வேந்தரின்
'ராஜவீதி' இவ்வீதியே! ஆசையில்
அன்று வந்தாண்ட வெள்ளையர் சீராட்ட
அருமை பெற்றதிவ் வீதியே... நேற்றைக்குக்
குண்டு வீழ்ந்து குலைக்கத் துடிக்கவும்
குலைந்திடாது நிமிர்ந்ததிவ் வீதியே!

நீலவானம் குனிந்து வருடிடும்.
நெடிய காட்டின் மரங்கள் தடவிடும்.
பாலைப்பழங்கள் குலைகுலையாகவே
பாதையோர மரங்களில் காய்த்திடும்.
ஆரவாரங்கள் அற்ற பொழுதிலும்
அருகிலே ரெயில் கூவிக் கடந்திடும்.
நாளும் போய்வரும் பார லொறிகளின்
நட்பில் இவ்வீதி ராவிலும் உலையிடும். (தொடரும்..)

- ஜெயங்கொண்டான் -

# காலமும் கவிஞனும்



உண்மையும் உயர்வும் நீதியும் நிறைந்த ஒரு இலட்சியத்திலிருந்து விலகிச் செல்லாதவனாக காலக்கண்ணாடியாக வாழ்பவன் கலைஞன். அவ்வாறான ஒரு கலைஞனே சோ.ப. என அறியப்படும் சோ.பத்மநாதன் என்ற கவிஞன். இவர் ஆங்கில ஆசிரியராக, விரிவுரையாளராக, பலாலி ஆசிரிய கலாசாலை அதிபராக கடமையாற்றி ஒய்வு பெற்றவர். தமிழ்க் கவிதை யாப்பையும், ஆங்கிலக்கவிதை முறைகளையும் நன்கு அறிந்தவர். தமிழில் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் இலக்கியம் படைப்பவர். சிறந்த தமிழ்க் கவிதைகளை ஆங்கிலத்திலும், சிறந்த ஆங்கிலக் கவிதைகளை தமிழிலும் மொழி பெயர்ப்புச் செய்து வருபவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளதும் மொழிமியல் பற்றி இவர் நன்கு தெரிந்து கொண்டவர் என்பதனால் மொழிபெயர்ப்பும் ஒரு கலையாக இவரிடம் மிளிர்கிறது. 'காவடிச் சிந்து' (பாடல்), வடக்கிருத்தல் (கவிதை) தொகுப்புக்களின் வெளியீட்டைத் தொடர்ந்து அவரின் ஆபிரிக்கக் கவிதை மொழிபெயர்ப்பும் வெளிவந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக யாழ்ப்பாணம் ஆங்கிலப் படிப்பு வட்டத்தின் *(Jaffna English study circle)* தலைவராக ஆங்கில மொழித் துறைக்குப் புலமைசார் பணிபுரிந்துவருகிறார். அகத்திலும், முகத்திலும் அமைதியானவர்; எளிமையானவர்; ஆனால் ஆழமானவர். இலங்கைத தமிழ் இனத்தின் அரசியல் இருளுக்குள் 'வடக்கிருத்தல்' என்ற தனது கவிதைத் தொகுதிக்கூடாக காலத்தைக் கவிதையாக்கிய கவிஞனிடம் இலக்கியச் சோலைக்கு 'கவிதை உரமிடுங்கள்' என்று தேடிப் போனோம். 'ஈழத்துக் கோணங்கியை' எங்களிடம் அனுப்பி வைத்தார்.

1986 இல் அவரால் எழுதப்பட்ட 'வடக்கிருத்தல்' என்ற கவிதையை அவரது 'வடக்கிருத்தல்' என்ற தொகுதியில் இருந்து எடுத்து மீள் பிரசுரம் செய்கிறோம். 2002 இல் அவரிடம் தோற்றம் பெற்ற 'ஈழத்துக் கோணங்கியையும்' பக்கத்தில் கொண்டு வருகிறோம்.

## காலமும் கவிஞனும்

இலக்கியச் சோலைக்குள் 'காலமும் கவிஞனும்' என்ற பகுதியில் உங்கள் வாசிப்பை உறுதிப்படுத்திக் கொள்க. நல்ல கவிஞனின் வாழ்வியல பின்புலம் என்ன? கல்வியியல், மொழியியல் பின்புலம் என்ன? உண்மையும், உயர்வும், நீதியும் நிறைந்த ஒரு இலட்சியத்தை அவனும் அவனது படைப்புக்களும் எப்படி கருவாக்கிக் கொள்வதோடு 'வேதனை வேகம்' கொண்டு அவை பிரசவிக்கப்ப டுகின்றன? ஆழ்ந்து அகன்ற நுண்மையாளனான ஒரு கவிஞனை காலம் எப்படிக் காப்பாற்றுகிறது? அவன் எப்படிக் காலத்தைக் காப்பாற்றுகின்றான்? இவ்வாறான கேள்விகளுக்கு விடைகளை நாம் பெற வேண்டும்..

## வடக்கிருத்தல்

எந்த வீடு தரைமட்ட மானதோ
எந்தப் பாலம் தகர்ந்து வீழ்ந்ததோ
எந்த வீதியில் கண்ணி வெடித்ததோ
எந்த ஊரின் (று) எரியுண்டு போகுதோ
எந்தச் சூட்டுக் களத்தில் உழவர் தம்
எலும்புக் கூடுகள் குவிந்து கிடக்குமோ
எந்த நூலகம் தீயில் முழுகுதோ
எந்த மாணவன் இறந்து கிடப்பனோ

எந்தப் பெண் கைம்பெண் ஆகிய செய்தியோ
எந்தப் பிள்ளை அநாதையாகின்றதோ
எந்தத் தாயின் புலம்பலும் விம்மலும்
இரவி னூடுவந் திதயம் பிளக்குமோ
எந்தப் பெண்ணின் கற்பைப் பறித்தவன்
எந்தக் காமுகன்? எங்கு முறையிட
சொந்த மண்ணிலும் இத்தனை சோகமா
சூரனார் அர(சு) இங்கு நடக்குதோ

தாயின் தோளில் கிடந்த குழந்தையின்
தலையினூடொரு குண்டு புகுந்ததாம்
வீரந்தானிது நிச்சயம் நாங்கள் ஓர்
விழாவெடுக்கலாம் விருது வழங்கலாம்
ஆரும் வீழலாம், வீழின் 'பயங்கர
ஆள்' என்றிலங்கா புவத் சொன்னதாகவே
கூவும் வானொலி! உண்மை நெடுந்துயில்
கொள்ளும்! பொய்யர சாட்சி செலுத்துமாம்.

தாயுன் மங்கல நாணை அறுத்தவன்
சகடை சப்பறம் தேர்கள் எரித்தவன் -
கோயில் வாசலில் கொலைகள் புரிந்தவன்
கும்பிட் டாள் ஒரு பெண்ணையும் சுட்டவன் -
தீயை யிட்டுன்றன் தீவெலாம் தீய்த்தவன்
தெய்வ சந்நிதி யைச்சீர் அழித்தவன்
யாவன்? ஏவிய பாதகன் யாவனோ?
யாவன் ஆள்பவன்? யாவன் கொல் ஆண்டவன்?

## ஈழத்துக் கோணங்கி



குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
வாகனம் எல்லாம் வரிசையாய் வருகுது
சோபனம் சொல்லித் தூது வருகுது
பிக்குமார் முகத்தில் கருணை பொழியுது
வீதித்தடைகள் விரைவில் விலகுது
இடிந்த வீடுகள் எழும்ப முனையுது
பிரிந்த உறவுகள் திரும்ப இணையுது
நாடு முழுவதும் அமைதிப் பேரணிகள்
ஏடுகள், வானொலி இதையே முழங்குது
அமெரிக்க விமானம் அடிக்கடி இறங்குது
சுமை இன்னும் கூடுமோ சொல்லடி சொல்லு!

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
நல்ல காலம் வருகுது நல்ல காலம் வருகுது
சண்டை தொலையுது சமாதானம் வருகுது
அண்டை அயலெலாம் அமளிப் படுகுது
குடுகுடு குடுகுடு

கருணாசேனவும் கலுமெனிக்காவும்
திருநெல்வேலித் தெரு உலாவருகிறார்.
பனம்பொருள் சுமந்த பைகளோடு
தினம் தினம் சிங்களச் சனம் அலை மோதுது
பழைய பயமெலாம் பஞ்சாய்ப் பறக்க
இளைய தலைமுறை நிமிர்ந்து திரியுது
சொல்லடி சக்தி சொல்லடி காளி
தொல்லைகள் விலக நல்லது சொல்லு
குடுகுடு குடுகுடு

சொல்லடி சொல்லடி மலையாள பகவதி
சுந்தரி சௌந்தரி சண்டிகா குண்டலி
ஆரணி நாரணி காரணி பூரணி
ஈழத் திருப்போர்க்கு நல்லகுறி சொல்லு
வாழத் துடிப்போர்க்கு நல்ல வழி காட்டு
குடுகுடு குடுகுடு


- கவிஞர் சோ.பத்மநாதன் -

# கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம்

பகுதி - 1

# மானிட விடுதலையை தளராது நேசிக்கும் படைப்பாளி

படைப்பாளியைப் பற்றிய கரிசனை கொள்ளாமல் படைப்புக்களைப் பார்ப்பது என்பதில் உடன்பாடு காணமுடியாது. படைப்பாளியின் வாழ்வியல் நேர்மைதான் அப் படைப்பாளி படைக்கும் இலக்கியத்தின் நேர்மையாகவும் அமைகிறது. அதேபோல வாழ்வியல் அனுபவத்தினூடாகவே தன்னால் வாழமுடியாமற்போன வாழ்க்கைபற்றியும் தனது இழப்புக்கள், தோல்விகள் பற்றியும் தான் சந்தித்த பேரிடர்கள் பற்றியும் ஒரு படைப்பாளியால் உணரப்பட்டு மானிடசமூகங்கள் இதற்கான நிவர்த்தியை எட்டும்வகையில் தனது இலக்கிய இலக்கைக் காட்டமுடியும். இவ்வகையில் தான் வாழ்ந்த, வாழும், வாழப்போகும் வாழ் வியல் நேர்மைத்தளத்தில் நின்றுகொண்டு இலக்கியப் படைப்புக்களை செய்யும் எந்தப் படைப்பாளியும் கவனத்திற்குரியவரே.



அறுபத்திமூன்று வயதைக் கடந்து கொண்டிருக்கும் ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியரான கவிஞர் ச. வே. பஞ்சாட்சரத்தின் கவிதை அனுபவம் நாற்பது ஆண்டுகளையும் கடந்ததாகும். இவர் ஆங்கில இலக்கிய இலக்கணப் பரப்புக்களையும் அறிந்தவர். தமிழ் இலக்கண இலக்கியப் பரப்புக்களை கசடறக்கற்ற ஒரு பண்டிதரான கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் இடதுசாரிகளின் சமதர்மக் கோட்பாட்டை ஆதரிப்பவர்.

ஆனால் 1950 களில் தமிழ்த் தலைவர்களின் அகிம்சை வழிச் சத்தியாக்கிரகம் வன்முறைகள் மூலமாக அரச இயந்திரத்தால் ஒடுக்கப்பட்டதிலிருந்து காலத்துக்குக் காலம் நிகழ்ந்துவந்த அரச இயந்திரங்களின் 'பயங்கரவாதங்களினால்' சலித்திருந்த கவிஞரினால் தமிழின் உரிமைகள் விடயத்தில் இடதுசாரிகள் சில தவறுகளை இழைத்தார்கள் என உணரப்படக்கூடிய நிலவரங்களும் அன்று காணப்பட்டன.

முதலாளித்துவத்துக்கு எதிராக சிங்கள தமிழ் பாட்டாளிகளின் ஒருமித்த ஒற்றுமையான வர்க்கப்புரட்சி மூலம் தமிழின உரிமைகளை மீட்கலாம் என்பதில் கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் நம்பிக்கை இழந்தார்.

தமிழ்த் தேசியவாதத்தை ஆதரித்து தனது கவிதைகளைப் படைக்கத் தொடங்கிய கவிஞர் இன்னமும் சமதர்மக் கோட்பாடுகளைத்தான் ஆதரிக்கின்றார்.

இலங்கைத் தமிழினத்திற்குரிய மரபுவழியான ஆள்புல எல்லைக் குள் பொருளாதார, அரசியல் ரீதியான சமதர்மக் கோட்பாடு அமுலாக்கப்பட வேண்டும். சாதி மத வேறுபாடுகள் கடந்த உயரிய கோட்பாடாக அது அமைய வேண்டுமெனக் கனவு கொண்டுள்ளார் கவிஞர்.

**க.பனுவலர்**

மனித சமூகத்தின் உறுதியான சிந்தனைத் தளத்தை வடிவமைப் பதில் அவன் சார்ந்த ஆன்மீக நம்பிக்கை மிகப் பெரும் பங்களிப்பை நல்கும் எனவும் கவிஞர் வலியுறுத்துகிறார். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் தமிழ்த் தேசியவாதம் என்ற அத்திவாரத்தில் நின்றுகொண்டு சமதர்மம், ஆன்மீகம் என்ற மூலப்பொருட்களினால் தனது கவிதைத் துறையைக் கட்டியெழுப்பியுள்ள இக் கவிஞருடன் கூடப்பிறந்த ஒரு வாழ்வியல் அம் சம் நகைச்சுவையும் புன்னகையும். சிறுமையையும், கயமையையும் கண்டு வெறும் அனல்கக்கும் கோபத்தோடு பொங்கியெழாமல் அவற்றை ஏளனமாக எள்ளி நகையாடி நகைச்சுவை பொங்கக் கவிதை சமைக்கும் கவிஞரின் கவிதைச் சுவடுகளைப் பார்ப்பதற்கு முன்னர், யாழ். இலக்கியவட்டத்தின் வெளியீடாக 'ச.வே.பஞ்சாட்சரம் கவிதைகள்' எனும் தலைப்பில் கவிஞரின் 'கவிதைகளின் வளம்' நிறைந்த தொகுப்பு ஒன்றும் அண்மையில் வெளிவந்துள்ளது என்பது கூறப்படவேண்டிய விடயமாகிறது. அத்துடன் கவிஞர் பாடிய 'பிரபாகரப்பெருங்காப்பியம்' அச்சேறிய வண்ணம் உள்ளது. இது நாற்பத்தேழு படலங்களுள் ஆயிரத்து முந்நூறுக்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்டுள்ளது. மூன்று பாகங்களாக வெளிவருகிறது. இக் காப்பியத்தில் சகல வகையான யாப்புச் சந்தங்களையும் கவிஞர் கையாளுகிறார். கவிஞரின் அரசியல் கவிதைகளும் விரைவில் வெளிவரவுள்ளன.

கவிஞரின் 'பூகம்பப் பூக்கள்' என்ற கவிதைத் தொகுப்பின் வெளியீட்டாளரான கிளிநொச்சியிலுள்ள ஆதவன் கல்வி நிலைய நிர்வாகி சி.மகேந்திரன் அவர்கள், துன்பவாழ்வியல் அனுபவத்துள்ளும் நகைச்சுவை ததும்பும் வெளிப்படுத்துகையை தனது பதிப்புரையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

1997இல் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் அக்கல்வி நிலையத்தின் மாணவர்களால் நடத்தப்பட்ட கலைமகள் விழாவில் கவிஞர் அவர்கள் "கலைத்தாயே! கலைத்தாயே" என்ற தலைப்பிலான கவியரங்கத்திற்கு தலைமை தாங்கினார். தனது தலைமைக் கவிதையில் கவிஞர் "கலைத்தாயே எங்களைக் கலைத்தாயே" என்று பாடிய கவிதையால் சபையே கலகலத்தது என்று பதிப்புரையில் கூறப்பட்டுள்ளது. அதே கல்வி நிலையத்தின் பரிசில் விழா 1997 இல் நிகழ்ந்தபோது 'இன்னும் எத்தனை நாட்கள்' எனும் தலைப்பில் கவிஞர் வழங்கிய கவிதை 'நாடும் வீடும்' தொகுதியில் இடம் பெற்றிருக்கிறது. அக்கவிதையின் ஓரிடத்தில் வன்னியின் இடம்பெயர் வாழ்வில் சாதாரண பொது மக்களின் அவல நிலைமையை பின்வருமாறு நகைச்சுவை ததும்பக் கூறுகிறார்.

"பிறீமாக் குயினுக்கும் குளோறோக் குயினுக்கும்  
சிறீமாக் குயினின் செல்வமகள் சந்திரிக்கா  
கருணைக்காய்த் தமிழனிங்கு காத்திருந்து சாகின்றான்.  
வரும் மருந்தென்றெதிர்பார்த்து மடிகின்றான் நோய்முற்றி" தொடர்ந்தும் இதே கவிதை பின்வருமாறு அமைகிறது.



இளமையில் கவிஞர்

"எப்பொழுது முதலைவந்தென் காலைப்பிடித்திழுத்து  
அப்படியே கொண்டுசென்று அடிச்சேற்றில் புதைத்திடுமோ?  
என்று பயங் கலக்கிடவே இறங்கி அக்கராயன்குளம்  
நின்று துள்ள லாட்டமிடும் நிலையின்னும் எத்தனை நாள்?  
குடிதண்ணீர்க் கொருகிணறு! குளிப்பதற்கு முதலைக்குளம்!  
உடுதுணிகள் தோய்ப்பதற்கும் ஒருவீட்டார் கிணறென்று  
அன்றாடம் அலைகின்ற அவலமென்று தீர்வதையா?" என்று கேட்கும் கவிஞர், இடம்பெயர்ந்து வன்னியில் வாழ்ந்த மக்களோடு ஒருவனாக வாழ்ந்து இருப்புக்கான சகல சவால்களையும் எதிர்கொண்டமை மூலமாக இடம்பெயர் வாழ்வின் மக்கள் அவலத்தை நகைச்சுவை குன்றாமல் வெளிப்படுத்துகிறார்.

கவிஞரின் 'நாடும் வீடும்' கவிதைத் தொகுப்புக்கு அணிக்கவிதை தந்திருக்கும் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் கவிஞரின் சொந்தக்கிராமத்தை பின்வருமாறு விபரிக்கிறார்.

'பகலெனில் மணியோசையெனவும்  
இரவெனில் தவிலோசையெனவும்  
இணுவில் கிராமமே இசைவடிவானது  
அங்கு ஏருழுமோசையிற்கூட ஒரு லயமிருக்கும்.  
நீரிறைக்கும் பொறிகூடச் சுருதி பிசகாது  
இராக்குருவிகள் அந்த ஊர்கடந்து போகும்பொழுதில்  
தாளத்துக்கிசைவாகத்தான் சங்கீதம் பாடும்.  
'இணுவில் மஞ்சத்தடி' ஒரு ஞானபீடம்  
அஞ்ஞான ஒப்பனைகள் அழித்து  
ஆசையணிகள் அகன்று போக  
மெய்ஞ்ஞானம் சித்திக்கும் மேட்டுநிலம்  
இணுவில் உறங்காத திருவாசல்  
கருவாய் திறந்து பாவலன் பஞ்சாட்சரம்  
கண்விழித்த மண்ணது'



கவிஞர் இரத்தினதுரை கூறியது போன்ற எழில் கொண்ட மிகப்பல கிராமங்களைச் சேர்ந்த மக்களும், கவிஞர்களும், இலக்கிய கர்த்தாக்களும் தாம் தழுவிக்கொண்டுள்ள அரசியல் காரணங்களுக்காக வன்னியில் இடர்காலத்தைக் கழித்து மீளவேண்டியிருந்தமை, தமிழ்மக்களது அரசியற் பயணத்தின் அறிதிறனைக் கூர்மைப்படுத்தவும் ஆழ அகலப்படுத்தவும் உதவியது எனலாம். அங்கே கோடையெனில் எரிக்கும் வெப்பம், மாரி யெனில் கூரை ஒழுக்கும் நீரோடு கடும் குளிர், கோடையோ மாரியோ எப்பொழுதும் உடல் நடுங்கவைக்கும் மலேரியா அத்துடன் தொடர்ந்து நீண்ட போர்ச்சன்னதங்கள் இவையெல்லாம் கவிஞருக்கும் மக்களுக்கும் நீண்ட பாடங்களைக் கற்றுக் கொடுத்துள்ளன. போராளிகளோடு போராளிகளாய் மக்கள், வறுமையுடனும், நோயுடனும், பாதகமான இயற்கைக் காரணிகளுடனும் போரின் புயல்வீச்சுடனும் போராடினார்கள்.

இனி கவிஞரின் கவிதைச் சுவடுகளுக்கூடாக வரலாற்றியல் போக்கை காலகதியில் கவிஞர் காட்டும்விதமும் கவிஞரின் நகைச்சுவை கலந்த கொதிப்பும் கருத்துக்கள் ஊன்ற உதவுகின்றன.

'நாடும் வீடும்' தொகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்விழாக் கவியரங்கில் 1970ஆம் ஆண்டில் 'தமிழே! தமிழா!' எனும் தலைப்பில் கவிஞர் பாடிய கவிதை இடம்பெற்றுள்ளது.

"படைநடத்தி நாடாண்ட பழந்தமிழர் கூட்டமின்று  
கடைநடத்திக் கஞ்சியுண்ணக் கண்டி,காலி ஓடுகின்றோம்"

என்று கவிஞர் சாடுகின்றார்.

*(அடுத்த திங்கள் தொடரும்.....)*

---

எம்.ஜி.ஆரிற்குத் தமிழகத்தில் கோவில் இருக்கிறதாம்! ஜெயலலிதாவுக்கும் இருக்கிறதாம்!

திரை நட்சத்திரங்கள் மீதான மாயக் கவர்ச்சி அந்தளவிற்குப் 'பக்தி வெறியாகவும்' அங்கு மாறிவிட்டிருக்கிறது.

ஈழத்தில் நிலைமை இன்னும் அந்த அளவிற்குச் சீரழியவில்லையென்பது ஆறுதல் தரும் விடயம். ஆயினும், நட்சத்திரங்கள் மீதான ஈடுபாடும், யதார்த்தத்தைப் புறந்தள்ளி-பகுத்தறிவை அவமதிக்கும் திரைப்படங்களிற்கான வரவேற்பும் இல்லையெனக் கூறமுடியாது.

## உள்வெளி

சமூகத்தின் வெவ்வேறு படிநிலைகளைச் சேர்ந்த இரசிகர்கள் "பழகிப்போன இரசனை" என்ற மாயச்சுழலில் இழுபட்டபடிதான் சென்று கொண்டுள்ளனர். *பாபா* திரைப்படமும் தற்போது வரவேற்புடன்தான் இங்கு பார்க்கப்படுகிறது.

ரிஷிகளின் தீர்க்கதரிசனக் கூற்றுக்கு அமைய - குறித்த நாளில் - 'ஓர் அவதாரமாக'ப் பிறக்கும் கதாநாயகன், - நாத்திகன் - *இரண்டாயிரம் ஆண்டுகளாக இமயமலையில் உயிரோடிருக்கும்* பாபாஜியைத் தரிசித்து ஏழு மந்திரங்களைப் பெறுகிறான்; அதைப் பரீட்சித்துப் பார்க்கிறான். உயரப்பறக்கும் இரண்டு காற்றாடிகளைக் கீழே இறக்கித்தன்னிடம் வரச்செய்யவும், பத்து லட்சம் ரூபாவைப் பெறவும் வேறு சிலவற்றுக்கும் மந்திரம் உதவுகிறது. முதலமைச்சருடனான அரசியல் முரண்பாட்டில் கொல்லப்பட்டு, சிதையில் எரிக்கப்பட்டு, அதிலிருந்து *உயிர்த்தெழுந்து* எதிரிகளைத் தாக்கிப் பாடம் புகட்டிய பின், இமயமலைக்குச் செல்ல முற்பட்டு - உடன் மனம்மாறி மறுபடியும் அரசியற் சமூகத்தினுள் நுழையத் திரும்புவதாய்க் கதை கட்டமைக்கப்பட்டிருக்கிறது..

'காலம் கனிந்தால் அரசியலுக்கு வருவேன்; நான் நினைத்தால் முதலமைச்சரை மாற்ற முடியும். தேவைப்பட்டால் நானே அந்த நாற்காலியில் உட்கார முடியும்' என்ற சேதியைத் தமிழக மக்களிற்குத் தருவதே ரஜினியின் நோக்கம்.

அதற்காகவே தன்னை ஓர் 'அவதார புரஷனாக'வும் திரையில் சித்திரித்துள்ளார்.

ஒரு சமகாலக்கதையில் இந்த அளவிற்குப் பகுத்தறிவை அவமதிக்கும் அபத்தங்களைச் சித்திரிப்பதில், வேறெந்தத் தமிழ்ப்படமும் இதனுடன் போட்டி போட முடியாதெனத் தோன்றுகிறது! கற்பனாவாத - வெறும் பொழுதுபோக்கு இரசனைக்குத் தீனிபோடும்- 'சூத்திரப் பாங்கான' திரைப்படங்களின் மாயையிலிருந்து பெருந்திரள் இரசிகரை மீட்டெடுக்கும் முயற்சிகள் அவசியமானவையாக உள்ளன.

நல்ல திரைப்படங்கள் பற்றிய சரியான கருத்துக்களை பரப்புவது ஒரு புறமாகவும், கலையழகு கொண்ட யதார்த்தப் படங்களைப் பார்க்கும் வாய்ப்புக்களை உருவாக்குவதை மறுபுறமாகவும் செய்ய வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் புறநிலைப் படிப்புகள் அலகுடன் இணைந்து இயங்கி வரும் 'திரைப்பட வட்டம்' நல்ல திரைப்படங்களை *இலவசமாகப்* பார்க்கும் வாய்ப்பை-சுமார் இரண்டு வருடங்களாக - அளித்து வருகின்றது. தற்போது ஒவ்வொரு ஞாயிற்றுக்கழமையிலும் காட்சி நடைபெறுகிறது.

சத்யஜித்ரேயின் 'பதேர் பாஞ்சாலி' 'அபராஜித்தோ'(வங்காளம்); லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிசின் 'கம்பெரலிய' (சிங்களம்); குருதத்தின் 'காகஸ் கே பூல்' (ஹிந்தி); ஹரிஹரனின் 'ஒரு வீர வடக்கன் கதா' (மலையாளம்); அப்பாஸ் கிரட்டஸ் ரோமியின் 'குளோஸ் அப்' (ஈரான்); ஷியாம் பெளகலின் 'மம்மூ', 'மந்தன்' (ஹிந்தி); றொபேட்டோ பெனிக்னியின் 'லைவ் இஸ் பியூட்டி புல்' (இத்தாலி); சார்லி சப்ளினின் பல படங்களெனச் சிறந்த பிற மொழிப்படங்கள் காட்டப்பட்டிருக்கின்றன-

'உதிரிப் பூக்கள்', 'நண்டு', 'அழியாத கோலங்கள்', 'அவள் அப்படித்தான்', 'குட்டி', 'முகம்', 'அழகி', 'பாரதி' போன்ற தமிழின் முக்கிய படங்கள் பலவும் காட்டப்பட்டுள்ளன. ஆயினும், இப் படங்களிற்கான பார்வையாளர் எண்ணிக்கை சராசரியாக முப்பதிற்குள்ளேதான் என்பது ஏமாற்றம் தருவதொன்று.

கலை இலக்கியக்காரர், நுண்கலைப்பிரிவுக் கற்கை நெறிகள் சார்ந்தோர், 'சலனச் சித்திர அமைப்பு' உறுப்பினரென ஏராளமானோர் எமது பிரதேசத்தில் இருந்தும் ஏன் இந்த மந்த நிலை?

இத்தகைய திரைப்படக் கழக நிகழ்வுகளில் பங்கு பற்றி - கருத்துப்பரிமாறி- அதை வலுப்படுத்துவதோடு, வெவ்வேறு இடங்களில் புதிய திரைப்படக் கழகங்களை உருவாக்குவதிலும் கலை ஈடுபாடு கொண்டோர் செயற்பட வேண்டியது முக்கிய சமுதாயத் தேவையாகவே உள்ளது!

**- சூரி -**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
*இயற்கையை நேசிக்க வேண்டும்.*
*அது உண்மையின் நண்பன்*
*-யங்*

# நமது நோக்கு

## இயற்கை வளம் காக்க மக்கள் இயக்கம் உருவாகட்டும் !

யாழ். மண்ணின் இயற்கை வளத்துக்கு தற்போது பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகச் சூழலியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.

ஒரு புறம் யாழ். குடாநாட்டில் மிகக் குறைவாகவே எஞ்சியிருக்கும் இயற்கைத் தாவரங்கள் அழிக்கப்படுவது நிகழ, மறுபுறம் எமது மண்ணின் தன்மையையே கெடுத்துவிடக் கூடியதாகச் செயற்கை உரங்களதும், கிருமிநாசினிகளதும் பாவனை அதிகரித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

யாழ். குடாநாட்டின் இயற்கைத் தாவரங்களைக் கருத்திலெடுக்கும் போது - வடமராட்சி கிழக்கு, தென்மராட்சிப் பகுதிகளில் வெகுவாகப் பரவிக்கிடந்த கண்டல் காடுகள் இன்று சரமாரியாக அழிக்கப்பட்டு வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

விறகுத் தேவைக்கென்ற பெயரில் காய்ந்த மரங்களை மட்டுமல்ல பச்சை மரங்களை வெட்டியழிப்பவர்களும் அதிகரித்துள்ளனர்.

இதே போன்று இப்பகுதியிலிருந்த சவுக்கு மரங்களும் கடந்த ஆண்டுகளில் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. இன்னும் சிலர் பசுமரங்களை எரித்துவிட்டு, சில நாட்கள் கழிய அவற்றை காய்ந்த மரங்களென வெட்டிச் செல்லும் தந்திரோபாயத்தையும் கடைப்பிடிக்கின்றனர்.

இது மட்டுமல்லாமல் - பொது நிறுவனங்களிலும், தனியார் வீடுகளிலும் உள்ள பயன்தரு மரங்கள் கூட, இன்று எவ்வித எதிர்நோக்குமற்று வெட்டித்தள்ளப்படும் சம்பவங்களையும் அன்றாடம் காணக் கூடியதாகவுள்ளது.

இவை ஒருபுறமிருக்க, இயற்கைப் பசளையையே பயன்படுத்தி, அதனூடாக சத்து நிறைந்த, சுவையான விளைபொருட்களைத் தந்த யாழ். விவசாயிகள் இன்று செயற்கை உரப்பாவனையையும் இரசாயனக் கிருமிநாசினிகளையும் அதிகளவில் பயன்படுத்த ஆரம்பித்ததன் பின்னர் - விளைபொருட்கள் அமோகமானதே தவிர, அவற்றின் தரமும் சுவையும் மிகக் குறைந்து விட்டதையும் காணலாம்.

அத்தோடு, உடலின் ஆரோக்கியத்திற்கு கேடுவிளைவிக்கும் இரசாயனப் பதார்த்தங்களும் இத்தகைய விளை பொருட்களூடாக மக்களை அடையத் தொடங்கிவிட்டன.

செயற்கை உரங்களின் பாவனையானது - யாழ். மண்ணுக்கே உரித்தான வளத்தையும், சமநிலையையும் மோசமாகப் பாதித்துள்ளதுடன் மண்ணியல் கட்டமைப்பும் மாறிவருவதாக விவசாய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

மண்ணியல் கட்டமைப்பு மாறினால், அதை மீளப் புனருத்தாரணம் செய்ய முடியாது எனவும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

ஏற்கனவே - குடாநாட்டின் மூலதாரமான தொழில்களில் ஒன்றான கடற்றொழில், கடல் வலயத் தடைகளால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், விவசாயமும் இவ்வாறு சேதமுறும் நிலைக்குச் செல்லுமாயின் - யாழ். மண்ணின் சுயபொருளாதாரம் என்பதே கனவாகி விடும் ஆபத்தும் எம் முன்னாலுள்ளது.

ஒரு காலத்தில் பெரும் உற்பத்திச் சமூகமாக விளங்கிய யாழ். சமூகம் - வெறும் நுகர்வுச்சமூகமாக மாறும் துர்பாக்கியமும் இதனால் ஏற்படும்.

எனவே - இந்த மண்ணிலும் மக்களிலும் நேசம் கொண்ட அனைவரும், எமது இயற்கை வளத்தையும், சூழல் பாதுகாப்பையும் முன்னிலைப்படுத்த வேண்டும்.

மரங்கள் வளர்ப்பையும், இயற்கைப் பசளைப் பாவனையையும் ஊக்கப்படுத்தும் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

எமது இளைய தலைமுறைக்கு - எம்மண்ணையும், சூழலையும் காக்க வேண்டியதன் அவசியமும், அதனூடான செயற்பாடும் பாடசாலை மட்டங்களிலும், பல்கலைக்கழக அளவிலும் உடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எமது வளங்களைப் பாதுகாப்பதென்பது பெரும் மக்கள் இயக்கமாக உருப்பெற வேண்டும். அதுவே எம் மண்ணையும் சூழலையும் பொலிவுடன் பேணுவதற்கான இறுதி வாய்ப்பாகவும் இருக்கும்.

உணர்வோம்! உறுதி கொள்வோம்!!

# பிரிட்டிஷிலிருந்து பத்து தமிழர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்

(லண்டன்)

பிரிட்டனில் இருந்து பத்துத் தமிழர்கள் சனிக்கிழமை இரவு இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

பிரிட்டனில் புகலிடம் கோரி நிராகரிக்கப்பட்டவர்களே நாடுகடத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை முதல் இந்தப் பத்துப் பேரையும் பிரிட்டிஷ் பொலிஸார் விமான நிலையத்துக்கு அருகில் உள்ள ஒரு இடத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் பிரிட்டனுக்குள் புகலிடம் கோரி நுழைந்த இவர்களின் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து கடந்த 3 மாதங்களாக மாதந்தோறும் 4ஆம் திகதிகளில் குடிவரவு அதிகாரிகளிடம் கையொப்பமிட்டு வந்தனர்.

கடந்த 4ஆம் திகதி கையொப்பமிடச் சென்ற போதே இவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பாராளுமன்றை இரண்டு மாதங்களுக்கு ஜனாதிபதி ஒத்தி வைக்கலாம் !

**- கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு -**

(கொழும்பு)

பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு பாராளுமன்றத்தில் வெளியிடப்பட்ட பின்னர் இரண்டு மாதங்களுக்கு நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்தி வைக்கலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜனாதிபதிக்கு சார்பாக அமையாவிட்டால் அடுத்த இரு வாரங்களில் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் நடவடிக்கையை எடுக்கலாம் எனக் கருதப்படுகின்றது. ஏற்கனவே ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# லண்டனில் நடைபெறவுள்ள 'வெல்லும் தமிழ் விழா'

(கொழும்பு)

லண்டனில் உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் எதிர்வரும் 12 ஆம் திகதி வெல்லும் தமிழ் விழா என்ற நிகழ்வை நடத்தவுள்ளது.

லண்டனில் உள்ள சிவன் நிலையத்தில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் இலங்கை, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளையும் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது.

வெல்லும் தமிழ்விழாவில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் சந்திரசேகரனும் லண்டன் சென்றுள்ளார்.

# நாவற்குழி ~ கேரதீவு வீதியை அண்டி மீளக் குடியமர அனுமதி வேண்டும்!

**- போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் மக்கள் மகஜர் -**

(சரசாலை)

கைதடி - நாவற்குழி கிராம அலுவலர் பிரிவுகளில் நாவற்குழி - கேரதீவு வீதியை அண்டியுள்ள குடியிருப்பாளர்கள் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு இராணுவ அதிகாரி மற்றும் அரச அதிகாரிகள், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் கோரியுள்ளனர்.

இப்பகுதிக் குடியிருப்பாளர்கள் 521வது படையணித் தளபதி மற்றும் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகம், பிரதேச செயலகம் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கேரதீவு - நாவற்குழி வீதியில் உள்ள 50 இற்கும் மேற்பட்ட குடியிருப்புக்களுக்குச் செல்லப் படையினர் இதுவரை அனுமதிக்கவில்லை. இங்கு தொடர்ந்தும் படையினர் தங்கியுள்ளனர். இதேவேளை கரையோரப் பகுதியில் மீளக் குடியமர 200க்கு மேற்பட்ட மக்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

எமது பகுதியில் இருந்தும் படையினர் வெளியேறி மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட வேண்டும். அத்துடன் இரு வருடங்களுக்கு மேலாக தடைப்பட்டுள்ள காலபோக நெற்செய்கையில் ஈடுபடவும் வழிவகை செய்யப்பட வேண்டும் என அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (34)

# புலிகளின் ஆயுத பலத்திலேயே தமிழர் பாதுகாப்பு தங்கி நிற்கிறது!

**- ஜோசப் பரராஜசிங்கம் சென்னையில் பேச்சு -**

(சென்னை)

தமிழரின் பாதுகாப்பு புலிகளிடமும், புலிகளின் ஆயுத பலத்திலுமே தங்கியுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் சென்னையில செய்தியாளர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் செய்தியாளர் மத்தியில் மேலும் பேசும்போது - தமிழரின் பலம் புலிகளிலும் புலிகளின் ஆயுத பலத்திலுமே தங்கியிருக்கிறது. எனவே நிரந்தரத் தீர்வு ஒன்று எட்டப்படும் வரை புலிகளின் ஆயுதங்களை களைவது என்பது முடியாத காரியம் எனத் தெரிவித்துள்ளார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் தமிழகத்தில் இருந்து வெளிவரும் பல நாளிதழ்களினதும், சஞ்சிகைகளினதும் செய்தியாளர்கள் கலந்து கொண்டனர்.

# மூத்த உறுப்பினருடன் கலந்து பேசாது தன்னிச்சையாக செயற்படும் சந்திரிகா !

**- சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர் குற்றச்சாட்டு -**

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முக்கியமான கொள்கை சம்பந்தப்பட்ட விடயங்களில் தம்முடன் கலந்தாலோசிக்க வேண்டும் என பொதுஜன ஐக்கிய முன்னணி மூத்த உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்துக்கு எதிராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்டு வரும் குற்றச்சாட்டுக்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கட்சியின் முக்கிய கொள்கை சம்பந்தப்பட்ட விடயங்களில் ஜனாதிபதி ஏனைய மூத்த உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் எனவும் தன்பாட்டிலேயே ஏனைய கட்சிகளையும் கட்சித் தலைவர்களையும் விமர்சிப்பது ஜனாதிபதி பதவி வகிக்கும் ஒருவருக்கு அழகானதல்ல என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோயிலாக்கண்டி கடலில் மீன்பிடிக்க அனுமதி!

(மீசாலை)

தென்மராட்சி தெற்கு கோயிலாக்கண்டி கடல்நீரேரிப் பகுதியில் நேற்று முன்தினம் முதல் மீன்பிடிக்கப் படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இராணுவ அதிகாரியான பிரிகேடியர் ஜயவர்த்தனாவுடனான சந்திப்பு ஒன்றினை அடுத்தே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இச்சந்திப்பில் தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர் எஸ்.முருகையா, மற்றும் கிராம அலுவலர்கள், மீனவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அரியாலைக் கடற்கரையில் இருந்து 200 மீற்றருக்கு அப்பாலும், கைதடி, நாவற்குழி, கோயிலாக்கண்டி ஆகிய பிரதேச கடற்கரையிலிருந்து 200 மீற்றருக்கு அப்பாலும் அரியாலை முனையிலிருந்து தனங்கிளப்பு அம்மன் கோவில் வரை கடலை ஊடறுத்து படையினரால் அமைக்கப்பட்ட பாலத்திலிருந்து மேற்காக 300 மீற்றர் அப்பாலும் காலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை மோட்டார் பொருத்தப்படாத படகில் சென்று மீன்பிடித்துவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.(25)

# பண்டத்தரிப்பில் இவ்வாரம் சமாதானக் கருத்தரங்கு

(நமது நிருபர்)

காணாமற்போன படைவீரர் சங்கத்தையும், போர் விதவைகள் சங்கத்தையும் சேர்ந்த குழு ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இக்குழு பண்டத்தரிப்பிலுள்ள தியான இல்லத்தில், இனங்களுக்கிடையிலான புரந்துணர்வு என்ற தலைப்பிலான கருத்தரங்கிலும் பங்குபற்றவுள்ளது.

வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்குகளில் யாழ். குடாநாட்டைச் சேர்ந்த பொது அமைப்புக்களும் கலந்து கொள்ளவுள்ளன.

# சுகாதாரமான சூழலைப் பேணுவது பொதுமக்கள் கைகளிலேயே உள்ளது!

சுகாதாரத்துறையினர் தமது பணிகளை இன்னோரன்ன இடர்களின் மத்தியில் மேற்கொள்கின்றனர் என்பதை உணர்ந்து, பொதுமக்களும் ஒத்துழைப்பினை வழங்கினால்தான் சுகாதாரத் துறையினரின் பணிகள் முழுமைபெற முடியும் என்கிறர் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி (M.O.H.) வைத்தியகலாநிதி ம. மரியதாசன்.

அவரது நிர்வாகப்பிரிவுக்குட்பட்ட செயற்பாடுகள் பற்றி அவர் 'நமது ஈழநாடு' இதழுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

## விருந்தினர் பக்கம்

தற்போது எமது பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மீள் குடியேற்றம் துரிதமாக நிகழ்ந்து வருகிறது. இவ்வாறு மீளக்குடியேறுவோரின் மலசலகூட வசதிமுக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

இந்த ரீதியில் நாவாந்துறை, குருநகர், பாஷையூர் பகுதிகளில் மலசலகூட வசதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. முன்னர் யுனிசெவ் நிறுவனம் இத்தகைய வசதிகளை அளித்துவந்தது. ஆனால் அரசாங்க அதிபர் ஊடாகவே இவ்வசதிகள் பெறப்படலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. 'ரெட்கோ' என்ற நிறுவனம் மலசலகூடம் அமைக்க ஒவ்வொரு குடியிருப்பாளர்களுக்கும் தலா ஆறாயிரம் ரூபா நிதியுதவி வழங்குகிறது.

திறந்த 5மாடிக்கட்டடத்தில் உள்ளோரிடம் இத்தகையதும் மேலதிகமானதுமான வசதிகளையளிக்க விண்ணப்பங்கள் எம்மால் கோரப்பட்டுள்ளன. மீளக்குடியமர்ந்தோர், வறுமைக்கோட்டில் உள்ளோர் என்போருக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. இதற்கமைய 100 வீட்டுக்காரர்கள் தெரிவாகியுள்ளனர்.

பொதுமக்களிடையே சுகாதாரக் கல்விப்போதனை எம்மால் சனசமூக நிலையங்கள், முன்பள்ளி மூலமாக கருத்தரங்குகள் நடத்தப்பட்டு போதிக்கப்படுகின்றன. வாரந் தோறும் குறிக்கப்பட்ட நாட்களில் இவை நிகழும்.

9 ஆரம்ப சுகாதார நிலையங்கள் எம்மால் நிர்வகிக்கப்படுகின்றன. 3 ஆரம்பப்பிரிவுகள் தரப்படுத்தப்பட்டுள்ளன.

1- குழந்தை நலன் மருத்துவப்பிரிவு

2- கர்ப்பிணித்தாய்மார் மருத்துவப்பிரிவு.

3- தாய் - சேய் நலன் மருத்துவப்பிரிவு



**ம.மரியதாசன்**
**சுகாதார வைத்திய அதிகாரி, யாழ்.மாநகரசபை.**

மாதத்தில் இருதடவைகள் என பதினான்கு நாட்கள் இச்சேவைகள் இடம்பெறுகின்றன. கர்ப்பிணித்தாய்மாரின் சிறுநீர், இரத்தஅழுத்தம் என்பனவும் இரத்தச்சோகை உள்ளதா எனவும் பரிசோதிக்கப்படுகின்றது. இந்தவகையில் பாதிப்புக்குள்ளானோர் யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

பிரசவிக்கும் சிசு பற்றியும் அதன ஆரோக்கியம் பற்றியும் கூடுதல் கவனம் செலுத்தப்படுகின்றது. சுகப்பிரசவத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் எமது இச்செயற்பாடுகள் அமைகின்றன. குடும்பநலத்திட்டம் பற்றியும் தாய்மாருக்கு அறிவுரை வழங்கப்படுகின்றது. வில்லைகள் அளிக்கப்படுகின்றன. அவசியமாயின் ஊசி மருந்தும் ஏற்றப்படுகின்றது.

குழந்தை போஷாக்குக்கென திரிபோஷா வழங்கப்படுகின்றது. எடை குறைந்த குழந்தைகள் நிலை இதனால் பேணப்படுகின்றது.

அரசாங்கத்தால் வழங்கப்படும் நுளம்பு வலைகள் வன்னியிலிருந்து வந்து மீளக்குடியேறியோருக்கும், வறுமைக்கோட்டின் கீழுள்ளோருக்கும் எம்மால் விநியோகிக்கப்படுகின்றன.

எமது நிர்வாகப்பிரிவு விரிவாக்கல் நிலையில் 5 பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளன.

1) தாய் சேய் நலன்பகுதி
2) பொது சுகாதார பரிசோதகர் பகுதி
3) பொது சுகாதாரப்பொறியியலாளர் பகுதி
4) யுனிசெவ் திட்டப்பகுதி
5) சுகாதாரக்கல்விப்பகுதி

என்பனவையே அவை. இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பொறுப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். சிரேஷ்ட அதிகாரி தரத்திலுள்ளவர்களே இவர்களாவர்.

பொது சுகாதாரப்பரிசோதகர்கள் உணவுச்சாலைகள், வர்த்தக நிலையங்களின் சுகாதாரம் பேணலை அவதானிப்பர். பொது சுகாதாரப் பொறியியல் பகுதியினர் வாய்க்கால் கழிவு நீர் அகற்றல் என்பன பற்றி கண்காணிப்பர். யுனிசெப் திட்டப் பகுதியினர் வெளிநாட்டு உதவிகள் மூலமான போஷாக்கு மேம்படல் நிலை, தொண்டர்க்கான பயிற்சி என்பன பற்றி அவதானிப்பர்.

சுகாதாரக்கல்வி உத்தியோகத்தர்கள் பாடசாலைகளுக்குச் சென்று விரிவுரைகள் நடத்துவர். சனசமூக நிலையங்களிலும் இவ்விதம் நிகழும்.

தற்போது பெரிதும் பேசப்படும் வாந்திபேதி நோயைக் குறித்துக் கூறும் அறிவுரை ....

குருநகர் பகுதியில் கடந்த மாத முற்பகுதியில் குடும்பப் பெண்ணொருத்திக்கு வாந்திபேதி உண்டானது கண்டறியப்பட்டு எமது துரித நடவடிக்கையால் அது மேலும் பரவாது முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இத்தகைய நோய் நிலையைத்தடுக்க கிணறுகளுக்குக் குளோரினிடப்பட வேண்டும். வீதியோரங்களில் குப்பை போடல் தவிர்க்கப்படல் வேண்டும். மலம் கழித்த பின் சவர்க்காரத்தால் கைகழுவ வேண்டும். உரிய சுகாதாரமுறைகளைப் பேணிநடக்க வேண்டும். உணவு வகைகள் மூடிவைக்கப்பட வேண்டும். காலாவதியான உணவுப் பொருட்களை விலக்கிக்கொள்ளல் வேண்டும்.

மேலும் கட்டாக்காலிகளின் தொல்லை இல்லாதிருக்க வேண்டும். பார்மஸிகளில் மருத்துவரின் உரிய சிபாரிசு இன்றி விபரீத விளைவை ஏற்படுத்தும் வில்லைகள் விற்கப்படக் கூடாது. உதாரணத்துக்கு வலியம் போன்ற தூக்கமாத்திரைகள். கழிவுநீர் வாய்க்கால்களை விஷமத்தனமாக மூடிவிடும் நிலை நீங்கவேண்டும். பொதுவாக பொதுமடங்கள் தமது ஒத்துழைப்பினை வழங்கினாலே எமது சேவைகள் முழுமைபெறும். எனவே மக்கள் ஒத்துழைப்பினை நாம் நாடி நிற்கிறோம்.

**நேர்காணல் - ஸ்ரீ**

# உலகத் தரத்தை எட்டும் யாழ்.சதுரங்க வீரர்கள்!

(அரியாலை)

இலங்கையின் தேசியச் சதுரங்கச் சம்பியன் பட்டத்திற்காக (2002) முக்கியமான மூன்று போட்டிகள் இலங்கை சதுரங்க சம்மேளத்தினால் (CFSL) நடாத்தப்பட்டது. இதில் முதற்போட்டியான பெரும் போட்டியில் (**major tournament**) யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு வீரர்கள் பங்கு பற்றினார்கள். இப்போட்டிகள் யாவும் கொழும்பில் நடைபெற்றன.

பெயர் விபரம் பின்வருமாறு:

தி. இராஜசிங்கம், நா. சோதிநாதன், ச. சத்தியேந்திரா, வி. உதயகுமாரன், எல். வித்தியாதரன் (யாழ். பல்கலைக்கழகம்) திரு. எஸ். சிவோதயன் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோர் ஆவர்.

இவர்களில் நா.சோதிநாதன் 5 புள்ளிகளையும் எஸ். சிவோதயன் 51/2 புள்ளிகளையும் திரு. எஸ். வித்தியாதரன் 51/2 புள்ளிகளையும் பெற்று கொழும்புமாவட்ட வீரர்களின் கவனத்தைக் கவர்ந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (மொத்தமாக 9 சுற்றுகள் நடைபெற்றன.)

இவர்களில் எஸ். சிவோதயன், எஸ்.வித்தியாதரன் ஆகியோர் அடுத்த கட்ட தேசிய - பிரிவுக்கு விளையாடத் தகுதி பெற்றனர். இப்பிரிவானது மிகவும் போட்டி நிறைந்ததாகவும், பலம் வாய்ந்ததாகவும் காணப்பட்டது. இதில் இலங்கையின் தற்போதைய சம்பியன் நீங்கலாக அனைத்து இலங்கையின் • முன்னணி வீரர்களும் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கது.

இதில் எஸ்.வித்தியாதரன் காலி மாவட்டச்சம்பியன் அத்துல ரஸல் உடன் விளையாட்டைச் சமன் செய்தும், இலங்கையின் தேசிய சதுரங்க வீரர் வி. கொனராவை வெற்றி கொண்டும், தேசிய சதுரங்க வீரரும், இலங்கையணியின் கடந்த ஆண்டு வீரருமான அத்துகோறளவுடன் போட்டியை சமன் செய்தும் , இளம் வீரர்களான அமில பாசுர , ஜெயசிங்க ஆகியோரை வெற்றி கொண்டும் தனது திறமையை தேசிய ரீதியில் நிரூபித்தது.

இங்கு குறிப்பிடத்தக்கது. இலங்கையின் முன்னாள் சம்பியனான ஜி.எல்.விஜேயசூரிய கொனரா - வித்தியாதரன் ஆட்டத்தில் வித்தியாதரன் வெற்றி பெற்றதை ஒரு சிறப்பான வெற்றியாகப் பாராட்டியது இங்கு மனங்கொள்ளத்தக்கது. இருந்தபோதிலும் தொடர்ச்சியாகப் பல தடவைகள் யாழ்.-கொழும்பு தரைவழிப் பாதையூடாகப் பயணஞ் செய்த களைப்பாலும் சுகவீன முற்றதாலும் போட்டியில் உச்சப் பெறுபேற்றைப் பெறமுடியாது போனமை மனவருத்தத்திற்குரியது. இருந்த போதிலும் தேசிய-டீ பிரிவில் அவர் 4 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டார். (அகில இலங்கை திறந்த சதுரங்கப்போட்டியில் எஸ். வித்தியாதரன் பங்குபற்றி 51/2 புள்ளி களைப் பெற்று அகில இலங்கை ரீதியாக ஆறாவது இடத்தைப் பெற்றுக் கொண்டமை தெரிந்ததே (2002 பங்குனி).

அடுத்து எஸ்.சிவோதயன், இலங்கையின் தேசிய சதுரங்க வீரர் சமீம் மொறாயஸை வெற்றி கொண்டும், இலங்கை சதுரங்க அணியின் 2000 ஆம் ஆண்டு வீரர் மயூரா யாப்பாவை விறுவிறுப்பான ஆட்டமொன்றில் இறுதிச் சுற்றில் தோற்கடித்தும் 61/2 புள்ளிகளைப் பெற்று இலங்கைத் தேசிய- A பிரிவிற்குத் தகுதி பெற்றார்.

இலங்கை தேசிய-A பிரிவு போட்டியே இலங்கையில் நடக்கும் அதியுச்சப் போட்டியாகும். இதுவே இலங்கைச் சம்பியனையும், இலங்கை சதுரங்க அணிக்கு வீரர்களையும் தெரிவு செய்யும் போட்டியாகும். இப்போட்டியில் இம்முறை விளையாடிய ஒரேயொரு தமிழர் என்ற பெருமையை எஸ்.சிவோதயன் பெற்றுக் கொள்கிறார். அதேவேளை இப்போட்டியின் மூலம் சர்வதேச தரநிர்ணயப் புள்ளிகளையும் (**International Rating**) பெறுகிறார். இதன் மூலம் தற்போது இலங்கையிலுள்ள இலோ ரேட்டிங்(**Elo rating**) உடைய ஒரேயொரு தமிழ் சதுரங்க வீரர் என்ற பெருமை யையும் அவர் பெற்றுக் கொள்கிறார்.

இலங்கை தேசிய-A பிரிவு போட்டியில் எஸ்.சிவோதயன் தனது முதல் ஆட்டத்தில் கண்டி மாவட்ட வீரர் எல்.ஜெயசிங்கவுடன் சமன் செய்தார். இரண்டாவது ஆட்டம் இலங்கையின் முன்னாள் சம்பியன் எல்.விஜேயசூரியவுடனானது. இதில் சிவோதயன் பிரகாசமான வெற்றி வாய்ப்பைக் கொண்டிருந்த போதிலும் ஓர் விரைவான நகர்த்தல் வெற்றி வாய்ப்பைத் தலைகீழாக்க இலங்கையின் அனுபவமுதிர்ச்சி கொண்ட விஜேசூரியவிடம் சிவோதயன் தோற்றார். அடுத்து பிரசங்க திஸநாயக்கவுடனான ஆட்டத்திலும் சமன்செய்ய பிரசங்க ஒப்புக் கொண்டபோதிலும் சிவோதயன் அதனை மறுத்து ஆடி வெற்றி வாய்ப்பை நழுவவிட்டார். அடுத்த சுற்று இலங்கையின் இவ்வாண்டு தேசிய-B பிரிவு சம்பியன் அனுருத்தவுடன் நடைபெற்றது. கடுமையாகப் போராடி 70 நகர்த்தலின் பின்னர் சிவோதயன் இவ்வாட்டதைை வென்று தனது வெற்றிக் கணக்கை ஆரம்பித்தார்.

அடுத்து இலங்கையணியின் முன்னாள் வீரரான டெரிக் பெரேராவையும், இலங்கையணியின் கடந்த ஆண்டு(2001) வீரர்களான திமுத்து, துலான் எதிரிசிங்க ஆகியோரையும் வெற்றி கொண்டு முன்னணியில் வரத் தொடங்கினார். அந்த வேளையில் சிவோதயன், நிரோஸ் டீ சில்வா, ஜி.எல்.விஜயசூரியா ஆகியோர் 41/2 புள்ளிகளைப் பெற்று ஆர்.பீரிஸ், டி.பொன்சேகா ஆகியோரிற்கு அடுத்தபடியாக முன்நிலை வகிக்க தொடங்கினார். அப போது இலங்கைச் சம்பிய னாகவும், இலங்கை அணியில் இடம்பெறவும் மிகவும் பிரகாசமான வாய்ப்புக்கள் சிவோதயனுக்கு இருந்தது. எனினும் அடுத்தடுத்து மூன்று சுற்றுக்களை வெல்லுந் தருணத்தில் தோற்று கிடைத்த வாய்ப்பை நழுவவிட்டார். இத் தருணத்தில் இலங்கையின் தற் போதைய சம்பியன் தனது சுற்றில் சமன் செய்ய விருப்பம் தெரிவித்த போதும் சிவோதயன் அதனை நிராகரித்தபடியால் பின் அவரிடமும் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று.

பின்னர் இலங்கையின் பெரும் வீரரும், **fide** உம் ஆன சுனில் வீரமந்திரியையும் (இவர் அமெரிக்காவிலிருந்து போட்டிக்கு வந்தவர்), இலங்கையின் சிறந்த சர்வதேச வீரர் ஆர். பீரிஸ் ஐயும் போட்டியில் சமன் செய்து (**drawn**) 51.'.2 புள்ளிகளைப் பெற்றுள்ளார். சிவோதயன் இலங்கைச் சதுரங்க குழாத்தில் (**National chess pool**) இடம்பிடித்திருக்கிறார். அத் துடன் ஜேர்மனி சென்று விளை யாடும் கழக சதுரங்க அணி ஒன் றும் சர்வ தேச போட்டி ஒன்றில் கலந்து கொள்ள இவரை அழைத் திருக்கின்றது. எனினும் எந்தவொரு நிறுவனமும் இதுவரை இவரது பயணத்திற்கு நிதி அனுசரணை வழங்க முன் வரவில்லை. இதனால் சர்வதேச சதுரங்கப் போட்டி ஒன்றில் கலந்து கொள்ளும் அருமையான வாய்ப் பொன்றை இழக்க வேண்டி உள்ளது. நிறுவணங்கள் போதிய அளவில் நிதி அனுசரணை வழங்கு மயின்இலங்கைத் தமிழ் வீரர்கள் சர்வதேசப் போட்டிகளில் கலந்து சாதனை படைப்பது சாத்தியமாகும். (55)

## காவலரணால் வெள்ள அபாயம்

(கொடிகாமம்)

கொடிகாமம் பெரிய நாவலடிப் பகுதியிலிருந்து நீர்வழிந்தோடும் வாய்க்காலில் அமைக்கப்பட்டிருக்கும் காவலரண் அகற்றப்படாததால் வெள்ள நீர் தேங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது

இப் பகுதியிலே அதிகம் வெளளம் தேங்குவதால் பல் வேறு தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்(36)

## சதுரங்கப் போட்டி

(அரியாலை)

இலங்கை சதுரங்க சம்மேளத்தின் இலங்கை அணித்தெரிவு, இலங்கைச் சதுரங்கச் சம்பியன் தெரிவு ஆகியவற்றுக்கான ஆரம்பக் கட்டப்போட்டிகள் எதிர்வரும் 12ஆம் 13ஆம் திகதிகளில் முற்பகல் 9.00 மணிமுதல் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெற வுள்ளன.

ஆண், பெண் இரு பாலரும் கலந்து கொள்ளும் இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 11ஆம்திகதிக்கு முன்னர் 70/1 வைமன் வீதி, நல்லூர் என்ற முகவரியில் தமது பெயர் விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்.சதுரங்க சம்மேளனத்தின் செயலாளர் வி.ரீ.எஸ். வித்தியாதரன் தெரிவித்துள்ளார் (55)

## தனியார் வீட்டில் சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்

(நாவற்காடு)

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தாமோதரம் பிள்ளை வீதியில் உள்ள தனியார் வீடொன்றில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் நன்மை கருதி 15 கிளைகள் திறக்கப்பட்டுள்ளதுடன் 3 கிளைகள் வலி காமத்திலும் இயங்கி வருகின்றது எனவும் சங்கத்தின் எரிபொருள் நிலையம் காலை 6மணி முதல் மாலை 7மணி வரை திறந்திருக்கும் எனவும் சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுச் சங்கம் சொந்தக் கட்டிடத்தில் இயங்குவதாயின் அதன கட்டிடத் திருத்தங்களிற்கு ரூபா 2 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (92)

## வரணி மத்திய மருந்தகத்தில் இரவுக் கடமை மருத்துவர் இல்லை

(மந்துவில்)

வரணி மத்திய மருத்துவமனையில் இரவுக்கடமையில் வைத்தியர்கள் ஈடுபடுவதில்லை.

இதனால் இரவு நேரங்களில் சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்களை மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு, அல்லது யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டி இருப்பதால் அப்பகுதி மக்கள் போக்குவரத்து மற்றும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

எனவே இவ்வைத்தியசாலைக்கு இரவுக்கடமையிலுள்ள வைத்தியர்களை ஈடுபடுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவ்வூர் மக்கள் கேட்டுள்ளனர். (28)

# எமது வளர்ச்சிப் படி நிலையில் 4ஆவது கட்டத்தை எட்டியுள்ளோம்!

## தீருவில் நினைவு தின நிகழ்வில் இளம்பரிதி

(கரணவாய்)

கெரில்லா, கெரில்லா - மரபுவழி, மரபுவழி - மக்கள் தொடர்பு, அரசியல பலம் என நான்கு கட்டங்களையும் நாம் எட்டியுள்ளோம் எனத் தீருவில் புனிதத்திடலில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த பன்னிரண்டு வேங்கைகளின் நினைவுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

தாய்லாந்தில் பேச்சு நடந்தது, இனியும் நடக்கப்போகிறது. இது தமிழர்கள் உலக அரங்கில் ஏற்கப்பட்டுள்ளார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

தமிழர்கள் தன்மானம் உள்ளவர்கள், எதற்கும் அஞ்சாதவர்கள், உறுதியான மனம் படைத்தவர்கள். அரசு பேச்சுக்களில் இருந்து இறங்குமேயானால் அது அவர்களுக்குத் தான் அவமானம்.

சமாதானப் பேச்சுக்கள் உடையுமானால் அவர்களுக்குப் பதிலடி கொடுக்க நாம் என்றுமே தயாராக உள்ளோம். அந்நியத் தலையீடுகள் எம்மீது வந்த போதெல்லாம் நாம் முகம் கொடுத்து வெற்றி பெற்றோம்.

ஒரு கெரில்லாப் போராட்டம் வெற்றிபெற வேண்டுமேயானால் அது பல கட்டங்களைத் தாண்ட வேண்டும். கெரில்லா, கெரில்லா - மரபுவழி, மரபுவழி - மக்கள் தொடர்பு, அரசியற்பலம் என்ற நான்கு கட்டங்களையும் நாம் எட்டியுள்ளோம்.

நாம் போராட்டத்தில் என்றும் உறுதியாகவும் தெளிவாகவும் உள்ளோம். தாய்லாந்தில் பேசுவதற்குக் காரணம் எமது மாவீரர்களின் உறுதியான வீரமும் எமது தலைவரின் உறுதியான முடிவுகளுமேயாகும். இன்று நாம் கடற்படையை உருவாக்க - குமரப்பா, புலேந்திரன் போன்ற மாவீரர்களின் தியாகமே காரணம் என்றால் அது மிகையாகாது - என்றார். (22)

# எமது மக்கள் சுதந்திரமாக வாழவே பேச்சுக்களில் நாம் இறங்கியுள்ளோம்!

## யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்விழி

(கரணவாய்)

எமது மக்கள் நிரந்தரமாக தாயகத்தில் சுதந்திரமாக வாழக்கூடிய நிலையை ஏற்படுத்தவே தாய்லாந்துப் பேச்சுக்களில் ஈடுபடுகிறோம் என தீருவில் திடலில் நடந்த அஞ்சலி நிகழ்வில் உரையாற்றும்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்விழி தெரிவித்துள்ளார்.

அவரது உரையில் -

நிரந்தரமான, சுதந்திரமான வாழ்வுக்காகவே நாம் உறுதியானதும், பெறுமதி வாய்ந்ததும் யாராலும் மாற்ற முடியாததுமான நிபந்தனைகளின் அடிப்படையில் பேசுவதற்கு முன்வந்துள்ளோம்.

பெறுமதியான நிபந்தனைகளை முன்வைத்தால்தான் இலங்கை அரசும் எமக்குப் பெறுமதி வாய்ந்த தீர்வுப்பொதிகளை முன்வைக்கும்.

எனவே எமது உறுதியான நிபந்தனைகளான, என்றும் எமது தாயகத்தின் பிரிக்கமுடியாத வட-கிழக்கு அலகு, தமிழர் சுயநிர்ணயம், தமிழர் தாயகம் என்ற அடி[illegible]படைகளை பேச்சுக்களுக்கு முன்வைத்தோம் எனக் குறிப்பிட்டார். (22)

# புலிகளின் கரங்களைப் பலப்படுத்தி நாம் தலைநிமிர்ந்து வாழ்வோம்!

## சிவாஜிலிங்கம் எம்.பி. பேச்சு

விடுதலைப்புலிகள் பலமாக இருந்தால் மட்டுமே தமிழர்கள் பலமாக நிற்கமுடியும். கூட்டமைப்பினராகிய நாமும் புலிகளுக்குத் துணையாக நிற்போம் எனத் தீருவில் புனிதத் திடலில் நேற்று நடந்த பன்னிரு வேங்கைகளின் நினைவுநாள் நிகழ்வில் உரையாற்றுகையில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தனது உரையில் -

புலிகளின் உடல், உள பலத்தினால்தான் அரசாங்கம் இன்று தாய்லாந்துப் பேச்சுவரை வந்துள்ளது.

தாய்லாந்தில் பேசுவதால்தான் உலக அரங்கில் தமிழ்மக்கள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள்.

இன்னும் எமது மக்கள் தலைகுனியாது தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால் எம்மக்கள் அனைவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சகலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கி அவர்களின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். அவர்கள் பலமாக நின்றால்தான் தமிழர்கள் பலமாக நிற்க முடியும். கூட்டமைப்பினராகிய நாமும் புலிகளுக்கு என்றும் உறுதியான முடிவுகளை எடுப்பதற்குத் துணையாக நிற்போம் எனக் கூறினார். (22)

# அஞ்சல் தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள்

(அரியாலை)

எதிர்வரும் 9ஆம்திகதி கொண்டாடப்படவுள்ள உலகத் தபால் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் அஞ்சல் திணைக்களத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட கட்டுரை, சித்திரப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

**கட்டுரை - தமிழ்**
**(ஆரம்பப்பிரிவு)**

1ஆம் இடம் - ஆர்.மோகனப்பிரியன் (யா/ஹாட்லிக் கல்லூரி), 2ஆம் இடம் - ஆர்.நிஷாந்தி (மன்னார் புனித ஸ்காவியேர்ஸ் பெண்கள் பாடசாலை)

**கட்டுரை - தமிழ்**
**(மேற்பிரிவு)**

1ஆம் இடம் - எம்.ஐ.அன்சியா (எருக்கலம்பிட்டி மகளிர் மகா வித்தியாலயம்), 2ஆம் இடம் - எம்.டான் பைரன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 3ஆம் இடம் - ஜெராலின் தனுஷியா ஜோன்பிள்ளை (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

**கட்டுரை - ஆங்கிலம்**
**(ஆரம்பப்பிரிவு)**

1ஆம் இடம் - கார்த்திகா சக்திவேல் (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் ஆங்கிலப் பாடசாலை)

**சித்திரப் போட்டி**
**(ஆரம்பப்பிரிவு)**

1ஆம் இடம் - ஜெயராஜா நதீஸ் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 2ஆம் இடம் - இராஜரட்ணம் அனுஷன் (மன்னார் புனித ஸ்காவியேர்ஸ் ஆண்கள் பாடசாலை) 3ஆம் இடம் - தங்கமோகன் ராஜ்குமார் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**சித்திரப் போட்டி**
**(மேற்பிரிவு)**

1ஆம் இடம் - ஜே.டி.அந்தோனிதாஸ் (மன்னார் புனித ஸ்காவியேர்ஸ் பெண்கள் பாடசாலை), 2ஆம் இடம் - முருகையா நிஷாலினி (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 3ஆம் இடம் - ஜே.செபஸ்தியான் (மன்னார் புனித சேவியர் கல்லூரி).

**தபால் முத்திரை சேகரிக்கும் போட்டி**

1ஆம் இடம் - எஸ்.சுரேந்திரா (புற்றளை மகா வித்தியாலயம்) 2ஆம் இடம் - மாதங்கி ஜீவபாலன் (புற்றளை மகா வித்தியாலயம்).(55)

# பிரிட்டிஷ், ஐரோப்பிய ஒன்றிய எம்.பிக்கள் வன்னிக்கு வருவர்!

(கிளிநொச்சி)

[illegible]பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்[illegible] மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் அடங்கிய குழு எதிர்வரும் 16ஆம் திகதி வன்னிக்கு விஜயம் செய்யவுள்ள[illegible].

வன்னிக்கு விஜயம் செய்யவுள்ள இக்குழுவினர் கிளிநொச்சியில் உள்ள அரசியற்றுறையின் நடுவப் பணிமனையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர் எனத்தெரிகிறது.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினரான றொபேட் யுவன், பிரித்தானிய தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான தோமஸ் ஹயட் ஆகியோரும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

சங்கத்தானையில்

# வெடிக்காத நிலையில் இருந்த ஷெல்கள் படையினரால் அழிப்பு

(சாவகச்சேரி)

சங்கத்தானை இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் நான்கு ஷெல்கள் வெடிக்க வைக்கப்பட்டன.

இப்பகுதியில் துப்பரவுப்பணியில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் வெடிக்காத நிலையில் ஷெல்கள் காணப்படுவதாகக் கொடுத்த தகவலையடுத்து அங்கு வந்த இராணுவத்தின் குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினரால் அவ்விடத்தில் வைத்தே ஷெல்கள் வெடிக்கவைக்கப்பட்டன. (29)

# பின்தங்கிய கராத்தே கலையை வளர்க்க விரைவில் முயற்சிகள்!

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் இன்பன்

இன்று பின்தங்கியிருக்கும் கராத்தே கலையை வளர்ப்பதற்காக விரைவில் முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என விடுதலைப்புலிகளின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் இன்பன் தெரிவித்தார்.

நேற்றுக்காலை யாழ். அடைக்கலமாதா ஆலயத்தில் 'ஜெரோம்' மண்டபத்தில் நடந்த யாழ்.மாவட்ட கராத்தே சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கராத்தே சங்கத்தின் மாவட்டத் தலைவரின் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் இன்பன் மேலும் தெரிவித்ததாவது:-

"கராத்தேத் துறையில், யாழ். மாவட்டம், தேசியரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. தென்னிலங்கையிலுள்ள 'கராத்தே' சங்கங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புக்கள் வசதிகள் எமக்கு இல்லை. 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வெளிமாவட்டங்களில் நடந்த கராத்தே சுற்றுப்போட்டிகளில் சிலவற்றைத் தவிர பெரும்பாலானவற்றில் கலந்துகொள்ளவில்லை.

எமது வளங்கள் பற்றாக்குறையானவை. உள்ள வளங்களைக் கொண்டு உச்சப்பயனைப் பெற வேண்டும். தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் கலந்துகொள்ள வேண்டும்.

கழகங்களுக்கிடையே போட்டி பொறாமை இருப்பதாக அறிகிறேன். இவற்றை நீக்கி ஒற்றுமைப்பட்டால் மாத்திரமே இந்தக் கலையைத் தரமுயர்த்த முடியும்

புலிகளும் இராணுவத்தினரும் ஒற்றுமையாகி விட்டார்கள். நீங்கள் மட்டும் ஏன் ஒற்றுமைப்படக்கூடாது. இந்தக்கூட்டம் அரசியல் நோக்கத்துக்காகக் கூட்டப்படவில்லை. 'கராத்தே' கலையை வளர்க்கவே கூட்டப்பட்டது.

வன்னியில் மக்கள் இராணுவத்துடன் மட்டும் போராடவில்லை. வறுமையோடும் போராடினார்கள். அங்கு இயங்கிய கராத்தே கழகங்கள், காட்சிகள் நடத்தி மக்களுக்கு உதவினர். அப்படியான மனிதாபிமான உதவிகளை 10 கழகங்களைக் கொண்ட இந்தச் சங்கம் முன்னெடுக்கும் என நான் நம்புகிறேன். புதிய கழகங்களும் அவசியம் பதியப்பட வேண்டும்.

மிகவிரைவில் மாவட்ட சுற்றுப் போட்டியொன்றை சங்கம் நடத்தவுள்ளது. இந்துப் போட்டி தொடர்பான விடயங்களில் சங்கமே முடிவுகளை எடுக்கும். இதில் தமிழீழ விளையாட்டுத்துறை தலையிடாது. போதிய உதவிகளை மட்டும் வழங்கும்.

இந்தக் கலையை வளர்க்க ஒற்றுமையாக எதிர்காலத் திட்டங்களைத் தீட்டி செயற்படவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். (54)

## பாடசாலைக்கு 40 லட்சம் நிதி

(கொடிகாமம்)

வரணி மகா வித்தியாலயத்தில் அபிவிருத்திப் பணிக்காக மாகாணக் கல்வி அமைச்சினால் 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியினைப் பயன்படுத்தி இரு வகுப்பறைகளைக்கொண்ட கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது. (36)

## கலந்துரையாடல்

(புலோலி)

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சமூக சேவை உத்தியோகத்தர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத்துறைப் பணிப்பாளர் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்தில் யாழ். மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (15)

# இன்றைய நாள் இனிய நாள்

**07.10.2002 - திங்கட்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- தனலாபம், தேக சுகம் நன்று, வாகன பலன், கௌரவம், கல்வி முன்னேற்றம், அறுசுவையுண்டி, |
| இடபம் | :- பணவரவு, எடுத்த காரியம் வெற்றி, எதிரி தலைகுனிவு, சுகவாழ்வு, பிரயாணம் தாமதம். |
| மிதுனம் | :- தாயார் சுகயீனம், புத்திர சுகக்குறைவு, மனப்பயம் நம்பிக்கை குறைவு, வாகனத் திருத்தம். |
| கர்க்கடகம் | :- எடுத்த காரியம் வெற்றி, சுபச்செலவு, பொருளைக் கொடுத்துக் கவலையடைதல், மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம். |
| சிங்கம் | :- மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், தெய்வ சிந்தனை, பணவரவு, பயணம் வெற்றி. |
| கன்னி | :- கல்வி முன்னேற்றம், விளைபொருள் விருத்தி, தேக சுகக்குறைவு ,கௌரவம், அலைச்சல். |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

| | |
|---|---|
| துலாம் | :- சிறந்த உணவு, கணவன் மகிழ்ச்சி, கர்வநிலை, அயலவர்களின் உறவு பேணப்படல் வேண்டும், கல்வியில் ஊக்கம், |
| விருச்சிகம் | :- சுபகாரியங்களில் பங்கு, செய்தொழில் லாபம், ஆலய வழிபாடு, மனஸ்தாபம், பணச்செலவு, கல்வியில் முன்னேற்றம். |
| தனு | :- புதிய முயற்சி வெற்றி, பெண்களால் வெற்றி, கௌரவம் தேடிவரும், சமய அறிஞர்கள் சகவாசம், கல்வி முன்னேற்றம். |
| மகரம் | :- பணவரவு, பொதுச்சேவை ஈடுபாடு, மனப்பயம், கருத்து வேறுபாடு, வெளியூர் பயணம், கல்வி முன்னேற்றம். |
| கும்பம் | :- எதிர்பாராத பயம், பணவரவு, நிம்மதி குறைவு, வைத்தியச் செலவு, கல்வியில் ஊக்கம் காட்ட வேண்டும், தூரப் பயணம் தவிர்க்க வேண்டும். |
| மீனம் | :- கௌரவம், சல சம்பந்தமான ரோகம், பணவரவு, இனிய உணவு, கல்வியில் முன்னேற்றம். |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இரண்டு புலிகளையும் விடுவித்தாலேயே படையினர் அறுவரும் விடுதலையாவர்!

## புறூவ் ஹொவ்டேயிடம் புலிகள் தெரிவிப்பு

(கிளிநொச்சி நிருபர்)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹோவ்டே நேற்றுக் காலை கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருக்கின்றார்.

நேற்றுக்காலை 10 மணியளவில் கிளிநொச்சி பொது விளையாட்டுத்திடலில் உலங்கு வானூர்தி மூலம் வந்து இறங்கிய ஜெனரல் புறூவ் ஹோவ்டே அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், புலிகளின் சமாதானச்செயலக இணைப்பாளர் புலித்தேவன் ஆகியோர் இச்சந்திப்பில் பங்கு பற்றியிருந்தனர்.

சுமார் 40 நிமிடங்கள் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளின் போது ஆறு படையினரின் விடுதலை தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட்டிருக்கின்றது. தமது இரண்டு உறுப்பினர்கள் விடுவிக்கப்படும் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆறு படையினரையும் விடுவிக்க முடியாதெனவும் இவ்விடயத்தில் கண்காணிப்புக்குழுவினரே இரண்டு தரப்பினருமிடையே செயற்பட வேண்டுமெனவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

புரிந்துணர்வு உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர் 24 புலிகள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என தெரிவித்த சு.ப.தமிழ்ச்செல்வ[illegible] தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலே[illegible] படையினர் கைது செய்யப்பட்டதாகவும் இந்த விடயத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு சிறிலங்கா சட்டங்களுக்குப் புறம்பான முறையில் நடந்து கொள்ளவேண்டும் என்றும் கேட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பாலா கேரளம் வழி வருவதற்கு ஜோர்ஜ் பெர்ணான்டஸுடன் பேச்சு!

## கட்டுநாயக்கா வழி பற்றி இறுதி முடிவில்லை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எந்தவழியாக வன்னிக்குச் செல்வது என்பது குறித்து இன்னமும் இறுதியான முடிவு எட்டப்படவில்லை எனக் கொழும்பு வட்டாரத்தில் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுநாயக்கா ஊடாகவே வன்னிக்கான பயணத்தை அன்ரன் பாலசிங்கம் மேற்கொள்வார் என முன்னர் தகவல்கள் வெளிவந்திருந்தன. நேற்றுமுன்தினம் செய்தியாளர்கள் கட்டுநாயக்காவில் காத்திருந்தபோதும் அவர் வரவில்லை.

ஆனால் இறுதி நேரத்தில் பயணத்தில் மாற்றம் செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது. இந்திய மத்திய அரசாங்கத்துடன் கலாநிதி பாலசிங்கத்தின் பயணம் தொடர்பாக பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாலேயே இம்மாற்றம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் ஊடாகவே இப்பேச்சுக்கள் இடம்பெற்று வருவதாகவும், இது வெற்றிகரமாக நடந்தால் கேரளாவில் உள்ள விமான நிலையத்தில் இருந்து கலாநிதி பாலசிங்கம் ஹெலி மூலம் வன்னிக்குச் செல்வார் என்றும் கொழும்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# ரணில் அதிருப்தியாளர் உதவியுடன் மாற்று அரசாங்கத்திற்கு முயற்சி?

(கொழும்பு நிருபர்)

அரசியல் அமைப்பின் 19வது திருத்தத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றத்தவறும் பட்சத்தில் புதிய தேர்தல் ஒன்றை நடத்தவோ அல்லது ரணிலின் தலைமையில் அதிருப்தியுற்றிருக்கும் ஐ.தே.க உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டு மாற்று அரசாங்கமொன்றை அமைக்கவோ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயற்சிகள் மேற்கொள்வதாகத் தெரியவருகின்றது.

அரசாங்கம் 19வது அரசியல் திட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றத்தவறும் பட்சத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் நாடளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் டிசம்பர் மாதத்தில் கிடைத்து விடும்.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு இப்போதைக்கு முயற்சிக்கவில்லை என்றும் அரசாங்கத்தை மாற்றுகின்ற நடவடிக்கையை எடுக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை-பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது கட்சியிலுள்ள சில சிரேஷ்ட தலைவர்கள் மீது அதிருப்தியுற்றிருப்பதாகவும்-அவர்களை தேசிய புலனாய்வுப் பணியகம் மூலம் கண்காணிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் ஜே.வி.பி.யின் செய்தி இதழ் ஒன்று தெரிவித்தது.

ஐ.தே.க. அமைச்சர்களான டபிள்யு.ஜே.ஏ.எம். லொக்குபண்டார, கருஜெயசூரிய, ருக்மன் சேனநாயக்க ஆகியோரே கண்காணிக்கப்பட வேண்டியவர்களென ஐ.தே.க. தவிசாளர் மல்லிக் சமரவிக்கிரம வீட்டில் நடந்த முக்கிய சந்திப்பொன்றில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்ததாகவும் தெரியவருகின்றது.

## மனித நேய அமைப்புகளின் அவசர கூட்டம்

சிறைச்சாலைகளில் பயங்கர வாத தடைச்சட்டத்தின் கீழ் பல வருடங்களாக எது விதவிசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் தங்களை விடுதலை செய்யுமாறு கோரி உண்ணாவிரதப் போ[illegible]ட்டம் நடாத்தி வருகின்றனர். அவர்கள் பொது அமைப்புக்களினது ஆதரவையும் கோரியுள்ளனர்.

இவ்விடயமாக ஒரு அ[illegible] கலந்துரையாடல் இன்று மாலை 4.00 மணிக்கு கோவில் வீதியிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளதாகவும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறும் சகல மனிதநேய அமைப்புக்களின் இணையத்தின் அங்கத்தவர்களையும் மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

# கைதிகளை விடுவிக்கக் கோரி வவுனியாவில் நாளை பேரணி

(வவுனியா நிருபர்)

சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களை விடுதலை செய்யக் கோரியும் வவுனியாவில் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது

நாளை காலை 10 மணியளவில் நான்கு முனைகளில் இருந்து ஆரம்பமாகவுள்ள இப்பேரணி கச்சேரியை அடைந்ததும் அங்கு வைத்து அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படும்

ஹொரவப்பொத்தானை வீதியில் இறம்பைக்குளத்தில் இருந்தும், கண்டி வீதியில் மகா வித்தியாலயத்தருகில் இருந்தும், மன்னார் வீதியில் குருமன்காட்டுச் சந்தியில் இருந்தும், யாழ். வீதியில் பிறவுண் கொம்பனியிலிருந்தும் ஆரம்பிக்கும் பேரணி வவுனியா கச்சேரியை வந்தடையும்.

கச்சேரியில் வைத்து ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோருக்கு அரச அதிபர் ஊடாக மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

இந்தப் பேரணிக்கான ஏற்பாடுகளை வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் செய்துள்ளது.

# தடுத்து வைக்கப்பட்டுள்ள புலிகளை விடுவிக்க சட்ட மா அதிபர் மறுப்பு!

(கொழும்பு)

திருகோணமலை, முள்ளிக்குளத்தில் படையினரால் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு விடுதலைப் புலிகளையும் விடுவிக்க சட்ட மா அதிபர் மறுப்புத் தெரிவித்திருக்கின்றார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளை விடுவிக்க திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை. உயர் நீதிமன்றத்திலேயே விடுதலைக்கான பிணை மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும்.

உயர் நீதிமன்றத்தில் புலிகளை பிணையில் விடுவிப்பதற்கான மனுத் தாக்கல் செய்யப்பட்டால் அதற்குச் சட்டமா அதிபர் திணைக்களம் எதிர்ப்புத் தெரிவிக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரண்டு புலிகளையும் விடுவிக்க இன்று உயர் நீதிமன்றத்தில் பிணை மனுத்தாக்கல செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியை நம்பமுடியாது

சந்திரிகாவால் தொடர்ந்து அரசாங்கத்தின் தலைவியாக இருக்க முடியாது என்று அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வார்த்தைகள் நம்பகத்தன்மையானவை அல்ல; நாம் ஜனாதிபதியை நம்பமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

# கைதிகளை விடுவிக்காவிடில் அரச இயந்திரம் செயற்படாது!

## பொது அமைப்புகளின் ஒன்றியம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதற்கு அரசாங்கம் விரைந்து உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அரசைக் கோரியுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னதாக விடுதலை செய்யப்படாத பட்சத்தில் அரச இயந்திரங்கள் முற்றாகச் செயற்படாத வகையில் நாடளாவிய வெகுஜனப்போராட்டங்களை நாம் தொடர்ந்து முன்னெடுக்க ஆயத்[illegible]மாயுள்ளோம் என்பதை அரசின் கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்[illegible]றோம் எனவும் யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.

### நெடுந்தீவிலிருந்து...

அடைந்ததும் பொதுமக்கள் பலர் கடற்கரையில் கூடினர். படகுகளைக் கரை சேரவிடாமல் பொதுமக்கள் தடுக்க முயற்சித்தனர். கற்களால் படகை நோக்கி வீசினர்.

படகுகள் கரைசேர்ந்ததும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் அனைவரும் படகிலிருந்து இறங்கி நெடுந்தீவுக்குள் நுழைய முயற்சித்தனர். எனினும் கோபம்கொண்ட பொதுமக்கள் தொடர்ந்து அங்கு செல்லவிடமால் அவர்களைத் தாக்கித் தடுத்து நிறுத்தினர். பல்வேறு முயற்சிகள் செய்த போதும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களை தொடர்ந்து செல்ல பொதுமக்கள் கடைசிவரை அனுமதிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து நண்பகலுக்குப் பின்னர் 3 மணியளவில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தமது முயற்சியைக் கைவிட்டு மீண்டும் கடற்படையின் படகுகளில் தொற்றிக் கொண்டனர். அப்போது மக்களது எதிர்ப்பிலிருந்து படகுகளில் ஓடிச்சென்று ஏறிய இருவர் கடலில் வீழ்ந்தனர். இவர்கள் கடற்படையினரால் கயிறுகளைக் கொண்டு மீட்கப்பட்டனர். அத்துடன் ஏற்கனவே நெடுந்தீவு ஈ.பி.டி.பி அலுவலகத்தில் இருந்து பொலீஸாரிடம் சரணடைந்த நான்கு ஈ.பி.டி.பி. உறுப்பினர்களையும் பொலீஸார் தமது பாதுகாப்புடன் அழைத்து வந்து கடற்படைப் படகில் ஏற்ற முயன்றனர். ஆனால் மக்கள் அதனை ஏற்காது அவர்களையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கக் கோரினர். மக்கள் பிடித்து வைத்திருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினரான சி. சதீஸ்குமார் (அமீன்வயது 26) என்பவரும போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டார். தொடர்ந்து அனைத்து ஈ.பி.டி.பியினரும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டனர்.

இதேவேளை - ஈ.பி.டி.பியினருக குப் பக்கச் சார்பாக இருந்ததாக கடற்படையினர் மீதும் பொலீஸார் மீதும் மக்கள் சீற்றம் கொண்டிருந்ததாக சம்பவத்தை நேரில் அவதானித்தோர் தெரிவித்தனர்.

(க,112)

### மிலிந்த...

பெற்றோரிடம் கோரிக்கை விடுத்தனர்.

புரிந்துணர்வு ஒப்பந்த நடைமுறைப் படியும், பேச்சுவார்த்தையைப் பொறுத்தும் குறிப்பிட்ட ஆறு படையினருக்கும் விடுதலை கிடைக்கும் என்றும் உண்ணாவிரதிகளிடம் தெரிவிக்கப்பட்டது. எனினும் படையினரின் பெற்றோர் எவரும் உண்ணாவிரதத்தைக் கைவிடுவதாக இல்லை. நேற்று நள்ளிரவுக்குப் பின்னரும் உண்ணாவிரதப்போராட்டம் தொடர்ந்தது.

### உண்ணாவிரதம்...

கைதிகளில் நால்வர் மயக்கநிலை அடைந்தனர். இவர்களில் இரு வரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று சிகிச்சையளித்தபோதும் கைதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தமையால் மீண்டும் சிறைச்சாலைக்கே கொண்டுவரப்பட்டனர்.

### தமிழ்...

விசாரணையும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு எம்மை விட்டு பிரிக்கப்பட்டிருக்கும் உறவுகளை நாம் மறந்து வாழமுடியாது. கடந்த காலங்களில் அரசுக்கேற்பட்ட யுத்தப் பின்னடைவுகளின்போதும், அரசியல் நெருக்கடிகளின்போதும் ஏற்பட்ட இனவெறியை சிறையில் வாடும் எமது உறவுகளின் மீது இனப்படுகொலைகளின் மூலமும் சித்திரவதைகளின் மூலமும் சிறிலங்கா அரசு வெளிப்படுத்தியது. கடந்த காலங்களில் வெலிக்கடை, களுத்துறை, பிந்துனுவெவ போன்ற சிறைக்கூடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் நாம் அனைவரும் அறிந்தவையே.

இந்நிலையில் எமது உறவுகளின் விடுதலையை உறுதிப்படுத்துவதற்காக, அவர்களின் போராட்டத்துக்கு நாம் அனைவரும் வலுச்சேர்ப்பது அவசியமானதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தீவகத்தில்...

அதிகாரி எதிரிவீர, காங்கேசன் துறை கடற்படைத்தள கட்டளை அதிகாரி ஏரங்க ஆகியோரும் -

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு சார்பில் தீவகப் பகுதிக்குரிய அதிகாரி பிரான்சிஸ்கோவும் கலந்து கொண்டனர்.

தீவகப்பகுதியில் வாழுகின்ற மக்களின் இயல்பு நிலைகளைப் பேணக்கூடிய வகையிலான கருத்துக்களைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விடுதலைப் புலிகள் இக்கூட்டத்தில் முன்வைத்தனர்.

யுத்தநிறுத்த உடன்படிக்கைகளுக்கு மாறாகப் படைத் தரப்பினர் மேற்கொள்ளும் அனர்த்தங்கள் பற்றியும் அதனால் பாதிப்புக்குள்ளாகி வரும் தீவக மக்களின் இன்னலகள் பற்றியும் அங்கு எடுத்துக் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் வருமாறு:-

- அல்லைப்பிட்டியில் அமைந்திருக்கும் சோதனை முகாமில் போராளிகள் அரசியல் பணிக்கு வரும்போது அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர். அதேபோல் மக்களும் அசௌகரியங்களை சந்திக்கின்றனர். இந்த நிலையில் மாற்றம் கொண்டு வந்து எல்லோரும் சுதந்திரமாக நடமாட வகைசெய்யப்படல் வேண்டும்.
- வேலணை மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் சுதந்திரமான போக்குவரத்துக்கும் சுதந்திரமான கற்றலுக்கும் வழிசெய்யக் கூடிய வகையில் வேலணை வீதி மணவர்களின் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.
- குறிகாட்டுவான் இறங்குதுறைக்குச் செல்லும் பாதையில் மாலை 6 மணிக்குப்பின் எந்தவொரு பயணிகளும் அனுமதிக்க[illegible]டுவதில்லை. அதனால் அந்தப் பாதையில் வாகனத்தை நிறுத்தித் தங்கும் பயணிகள் பல இன்னல்களை அனுபவிக்கின்றார்கள். அதனால் அவர்கள் இறங்குதுறையை அண்டிய பகுதி[illegible]ல் தங்குவதற்கு வழிசெய்யப்ப[illegible]ல் வேண்டும். குறிப்பாக சிங்களப் பயணிகளே அதிகமாக இதனால் பாதிக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.
- புங்குடுதீவில் தற்போது நடைமுறையில் இருக்கும் வதிவிடப் பாஸ் நடைமுறையை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது.

அத்துடன் தீவுக்கடலில் இந்திய மீனவர்கள் அத்து மீறி வருவதால் தீவக மக்களின் தொழில் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறு தெரியப்படு[illegible]திய போது எல்லா விடயங்க[illegible]யும் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுப்பதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07- 10- 2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.